Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail : tilkojaffna@gmail.com T.P : 0212225969
Web : www.Cityhoteljaffna.com Hotline: 0212229497
(C/2278)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 24 சனிக்கிழமை (06.04.2013) பக்கங்கள் 20 ஓசை – 188

















# இலங்கைக் கடற்பரப்பில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள்

## கடற்கண்காணிப்பை அதிகரித்தது இந்தியா



(புதுடில்லி)

இந்து சமுத்திரக் கடல் பிராந்தியத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டம், என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளதாக இந்தியப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையை அண்டிய பகுதிகளிலேயே மிக அதிகமாக இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் தமது போக்குவரத்தைச் செய்துள்ளன. சரியாக அடையாளம் காணமுடியாத வகையான பல நீர்மூழ்கிக்கப்பல்கள் அணி அணியாக இக்கடல் பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டமை இந்தியக் கடற்படையின் கடற்கண்காணிப்புக் கருவிகளில் பதிவாகியுள்ளன என்றும் அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது.

இந்தியக் கடற்படையின்

(19) ஆம் பக்கம் பார்க்க

## புத்தாண்டு விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு யாழ்.பொலிஸாரும், இராணுவத்தினரும் ஒழுங்கு செய்து நடத்தும் விளையாட்டுப் போட்டிகள் இன்று காலை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

விளையாட்டுக்களில் ஆர்வமுள்ள அனைவரும் இன்று நடைபெறவுள்ள விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றித் தமது ஆற்றலை வெளிப்படுத்த முடியுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று யாழ்.சிரேஷ்ட


(19) ஆம் பக்கம் பார்க்க

## அழுத்தங்கள் எது வந்தாலும் இலங்கையுடனான உறவு முறியாது

(புதுடில்லி)

எந்தவிதமான அழுத்தங்கள் எமக்கு ஏற்பட்டாலும் இலங்கையுடனான நட்புறவை முறிக்க இந்தியா தயாராக இல்லை என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்தார்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா அதிகாரத்தைப் பணயம் வைத்து செயற்பட்டதாகவும் வெளிவிவகார உள்நாட்டைச் சேர்ந்த சில கட்சிகள் இலங்கைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசாங்கத்திற்கு கடுமையான அழுத்தங்களை பிரயோகித்து வந்ததாகவும் அவர்



குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்த அழுத்தங்களுக்கு மத்தியில் எது நியாயமானதோ அந்தத் தீர்மானத்தை மத்திய அரசாங்கம் எடுத்ததாகத் தெரிவித்துள்ளார். தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுமாறு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும், இந்தத் தீர்மானத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## நெல்லியடிச் சந்தையில் நடமாடும் வியாபாரத்துக்கு தடை

புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நெல்லியடி பொதுச் சந்தையில் தற்போது வியாபாரம் செய்பவர்களைத் தவிர ஏனைய நடமாடும் வியாப்பாரிகளுக்கு அனுமதி எதுவும் வழங்கப்படமாட்டாதென வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நெல்லியடி பொதுச் சந்தையில் போதியளவு இடவசதி இன்மையால் இம்முறை நடமாடும் வியாபாரிகளுக்கு அங்கு வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படமாட்டாது. மாறாக இவர்களுக்கான இடவசதி வதிரி முன்பள்ளியில் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், எனவே இங்கு வியாபாரத்தை மேற்கொள்ளவுள்ள வியாபாரிகள் அதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு தமது வியாபாரத்தை மேற்கொள்ளலாமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (18)

## யாழ்.குடாவில் குற்றச்செயல்கள் நாளுக்குநாள் அதிகரிக்கிறது

### ஒரே நாளில் 128 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் யாழ்.மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச் செயல்களின் நிமித்தமும், நீதிமன்றத்தின் பிடியாணையின் பிரகாரமும் 128 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.சிரேஷ் பொலிஸ் அத்தியட்சகர் முகமட் ஜெப்றி தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழில் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி வைபவ்ரீதியாக நேற்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் ஐயாயிரம் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த அபிவிருத்திச் செயற்திட்டத்தை யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலனரின் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்தின் மாவட்ட நிகழ்வாக வலிகாம வலயத்திற்குள் உள்ள வட்டுக்கோட்டை இந்து ஆரம்ப பாடசாலையில் மேற்படி திட்டத்தினை நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில், மாவட்டச்செயலர் சுந்தரம் அருமைநாயகம், மாகாணகல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.மோகனேஸ்வரன், சமுர்த்தி ஆணையாளர் மகேஸ்வரன், வலி.வடக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் ஜீவன், பிரதேச செயல்ர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து தென்மராட்சி வலயத்தில் சாவகச்சேரி இந்து ஆரம்ப பாட

(19) ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் கோரவிபத்து சம்பவ இடத்திலேயே இருவர் பலி



கிளிநொச்சி,155ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் கணவனும் மனைவியும் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார். சம்பவம் நேற்றுக் காலை 8 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

விசுவமடுவிலிருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்ஸுடன் நெடுங்கேணியிலிருந்து கிளிநொச்சி நோக்கி வந்துகொண்டிருந்த ஆட்டோ மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.இதில் ஆட்டோவில் இருந்து வந்த கணவனும் மனைவியும் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். இருவரது சடலங்களும் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நெடுங்கேணியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் தெய்வேந்திரகுமார்

(19) ஆம் பக்கம் பார்க்க

# வல்லிபுர ஆழ்வார் ஆலயக் காணியை ஆக்கிரமிக்க முயன்றவர்கள் கைது

## ஆக்கிரமிப்பைத் தடுக்க முயன்றவர் மீது தாக்குதல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை வல்லிபுர ஆழ்வார் ஆலய தெற்குப்புறக் காணியை ஆக்கிரமிக்க முற்பட்டவர்கள் வல்லிபுரக் கோயில் அறங்காவலர் சபை உறுப்பினரும் பருத்தித்துறைப் பிரதேச சபை எதிர்க்கட்சி உறுப்பினருமான தம்பிராசா மணிதரன் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் 10.00 மணியளவில் வல்லிபுர ஆழ்வார் கோயில் தெற்குப்புறக் காணியை ஆக்கிரமித்து எல்லையிட புலோலியைச் சேர்ந்த மூன்றுபேர கொண்ட குழுவினர் சென்றுள்ளனர்.

இதன்போது சம்பவ இடத்திற்குச் சென்ற மணிதரன் மீது இவர்கள் கத்தியால் தாக்கியுள்ளனர். இவர் தலையில் காயமடைந்து மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக வல்லிபுர ஆழ்வார் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் அன்னலிங்கம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். மூவரையும் கைது செய்துள்ள பொலிஸார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (01,116)

# இடத்துக்கு இடம் மாறுபடும் விலை பாண் வாங்கும் மக்கள் மீது சுமை

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறித்த சில பிரதேசங்களில் வெதுப்பக உற்பத்திப் பொருளான பாண் பல்வேறு விலைகளில் விற்கப்படுவதாகவும் சில இடங்களில் விற்கப்படும் பாணின தரமும் குறைவாக உள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பாலான மக்கள் தமது உணவுத் தேவைக்காக வெதுப்பக உற்பத்திப் பொருட்களையே கொள்வனவு செய்து நுகர்வதை அவதானிக்க முடிகின்றது. இருப்பினும் குறித்த பகுதிகளில் பாணின் விலை வேறுபட்டு காணப்படுவதை மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்

சில வெதுப்பக உரிமையாளர்கள் 50 ரூபாவிற்கும் வேறு சில வெதுப்பக உரிமையாளர்கள் 55 ரூபாவிற்கும் மேலும் சில வெதுப்பக உரிமையாளர்கள் 60 ரூபாவிற்கும் பாணை விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால் மக்களிடையே ஒரு குழப்பநிலை உருவாகி வருவதை அவதானிக்க முடிகிறது. இது தொடர்பாக சில வெதுப்பக உரிமையாளர்களை நாடிய போது முன்பு முல்லை மாவட்ட வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் என்ற ஒன்று இருந்ததாகவும் அதில் அனைத்து வெதுப்பக உரிமையாளர்களும் அங்கத்தவர்களாக இருந்ததால் இது தொடர்பான பிரச்சினைகள் வரும போது சங்கத்தினூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தீர்வுகள் பெறப்பட்டதாகவும் தற்போது அவ்வாறானதொரு சங்கம் இல்லைமையே மேற்படி பிரச்சினைகளுக்குக் காரணம் எனவும் தெரிவித்தனர்.

எனவே குறித்த தரப்பினர் இது தொடர்பாக கூடிய கவனம் எடுத்து மக்களின் நலன் பேண ஒத்துழைப்பார்களா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# வடக்கில் ஆசிரியர் நியமனங்கள் மாத இறுதியில் வழங்கப்படும்

கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து 2012 ஆம் ஆண்டு வெளியேறிய ஆசிரியர்களுக்கான ஆசிரிய நியமனம் எதிர்வரும் 20.04.2013 அன்று வழங்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தாமதமாகும் இவர்களின் நியமனம் தொடர்பாக கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு வினவி இந்த நியமனங்களை உடனடியாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கு அமைவாக எதிர்வரும் 20.04.2013 நியமனம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வட, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரிய பற்றாக்குறை இதன்மூலம் ஓரளவிற்கு நிவர்த்தி செய்யப்படுமென்றும் பொதுச செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சிகளை நிறைவுசெய்துள்ள ஆசிரியர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாகவும் கல்வி அமைச்சிடம் எடுத்துரைத்துள்ளதாகவும் விரைவில் அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படுமென்றும், தொலைக்கல்விக்கூடாக பயிற்சிகளை மேற்கொண்டு பின்னர் ஆசிரிய கலாசாலைகளில் இணைக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுகள் தொகுப்பாக்கப்படுவதில் ஏற்படும் தாமதம் அதுவென்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் ஆசிரிய உதவியாளர்களாக இருந்து ஆசிரிய பயிற்சியினை நிறைவு செய்த ஆசிரியர்களின் வேதன மாற்றத்திற்காக விரைவாக பெறுபேற்றினை வெளியிட்டு அவர்கள் நிரந்தர ஆசிரிய வகுதிக்குள் உள்வாங்கப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர அதிபர் சேவைத் தரம்: 2-I இல் நீண்டகாலம் கடமையாற்றி அதிபர் சேவைத் தரம்:1 கிடைக்கப்பெறாத அதிபர்களின் நியமனம் தொடர்பாக பல தடவைகள் கல்வி அமைச்சிடம் எடுத்துக்கூறியதன் பயனாக அவர்களுக்கான நேர்முகத் தேர்வு இப்பொழுது கல்வி அமைச்சில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அவை நிறைவடைந்ததும் 1AB பாடசாலைகளில் நிலவும் அதிபர் பற்றாக்குறையும் நீக்கப்படும் எனவும் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

ST.JOHN'S COLLEGE, JAFFNA
CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA
MERIT SCHOLARSHIP AWARD - G.C.E.(A/L) - 2015 BATCH

(ஆங்கில / தமிழ் மொழிமூலம்)

2012 O/L எடுத்து 2015 Batch இல் க.பொ.த (உ/த) எடுக்க இருக்கும் மாணவர்களிற்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பெயர் :-...............................................
02. 2012 இல் O/L எடுத்த பாடசாலை :-...........................
03. க.பொ.த. (உயர்தரத்தில்) பயில விரும்பும் துறை : கலை / வர்த்தகம் / உயிரியல் / கணிதப்பிரிவு
04. பயில விரும்பும் மொழி : ஆங்கிலம் / தமிழ்
05. தந்தையார் தொழில் :-........ தாயார் தொழில் :-.........
06. குடும்ப விபரம் :-...............................................
...............................................
...............................................
...............................................
07. விலாசம் :-...............................................

அதிபரால் உறுதி செய்யப்பட்ட பிறப்புச்சான்றிதழ் போட்டோ பிரதியும், O/L பெறுபேற்றுச் சான்றிதழ் போட்டோ பிரதியும் இணைகப்படவேண்டும்.

விண்ணப்பங்கள் 10.04.2013 முன்னர் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆண்கள் : அதிபர், சென்.ஜோண்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
பெண்கள் : அதிபர், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

அதிபர்கள். (C/2485)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடம் நகர்த்தவேண்டியிருப்பதாலும், புதிய உயர் அழுத்த மார்க்கங்களின் கட்டமைப்பு வேலைகளுக்காகவும் 08.04.2013 திங்கட்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் மாலுசந்தி முதல் இரும்பு மதவடி, மடத்தடி வரையான பிரதேசம், அண்ணாசிலையடி முதல் கரணவாய் வரை யான பிரதேசம் ஆகிய இடங்களிலும் 09.04.2013 செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரையும் சாமியன் அரசடிப் பிரதேசத்திலும் 10.04.2013 புதன்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் சுப்பர்மடம் பிரதேசத்திலும் 11.04.2013 வியாழக் கிழமை 08.30 மணியிலிருந்து மாலை 05.00 மணிவரையும் நெல்லியடிப் பிரதேசத்தின் ஒரு பகுதி, வதிரிப் பிரதேசம், அல்வாய் பிரதேசத்தின் ஒரு பகுதி, திக்கம், உடுப்பிட்டியின் ஒரு பகுதி, மயிலியதனை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி வரையான பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபை அறிவித்துள்ளது.

## றிசாட் பதியுதின் முல்லை விஜயம்

(கொழும்பு)

அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் வடமாகாண ஆளுநர் சந்திரசிறி இன்று முல்லைத்தீவு மற்றும் நெடுங்கேணி பிரதேசங்களுக்கு வருகை தரவுள்ளனர்.

குறித்த பிரதேசங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்வுகளில் பங்கு பற்றுவதுடன் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட மகப்பேற்று விடுதியையும் திறந்து வைப்பார்கள். (04)

## மாணவர்சங்க அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

புவியியல் பட்டதாரிகள் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம் மற்றும் முகாமைத்துவக் குழுத்தெரிவு இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியில்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு யாழ். பல்கலைக்கழக புவியிற்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் துறைசார்ந்த அனைத்துப் பட்டதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (பா)



புதிய பெயர் மாற்றம்

இதுவரை காலமும் தபோதரன் ஹாட்வெயார்

எனும் பெயரில் இயங்கிவந்த எமது நிறுவனம் தற்போது





லம்போதரன்

LAMPOTHARAN

எனும் புதிய நாமத்துடன் அதே முகவரியில் புதுப்பொலிவுடன் இயங்கிவருகின்றது

என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

59, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

(R/174)

தொ.பே. 0212240047

உரிமையாளர்

# கிராமப்புற பாடசாலைகளின் உயர்வுக்கு பெற்றோர்களின் பங்களிப்பு அவசியம்

## – வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர்

(வடமராட்சி)

கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலயத்தைச் சூழவுள்ள சமூகத்தவர் எல்லோருடைய பாடசாலை என நினைத்து தங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புகின்ற போது மாணவர் தொகை அதிகரிப்பதுடன், தேவையான வளங்களும், படிப்படியாக கிடைக்கின்ற வாய்ப்புக்கள் ஏற்படும் என வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கரவெட்டி ஸ்ரீ நாரதா வித்தியாலய பெயர் வளைவுத் திறப்பு விழா அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இப்பெயர் வளைவினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

தொடர்ந்து இந்நிகழ்வில் கலந்துகொண்டுபேசுகையிலேயே வலயக்கல்விப்பணிப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஸ்ரீ நாரதா வித்தியாலயம் கரவெட்டிக் கோட்டத்துக்குட்பட்ட தரம் 2 பாடசாலையாக இருந்தபொழுது மிகவும் வறுமையான மாணவர்களுக்கு அறிவூட்டுகின்ற வித்தியாலயம் இந்த வித்தியாலயத்தினுடைய வளர்ச்சி எதிர்கால இலக்கை நிறைவேறுவதற்கு பல தேவைப்பாடுகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டுவருகின்றது.

அந்த வகையில் இவ் வருடம் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், இப்பாடசாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அதிபரும் இந்தப் பாடசாலையை மிகக்குறுகிய காலத்தில் நல்ல நிலைக்கு மாற்றியிருக்கின்றார்.

பாடசாலைச் சமூகத்தினுடைய ஒத்துழைப்பையும், தனது பாடசாலைக்காக திசை திருப்பியுள்ளார். பழைய மாணவர்களும், இப்பாடசாலையினுடைய செயற்பாட்டிற்காக அவர்களின் உதவி கிடைப்பதற்கு பங்காற்றியிருக்கின்றார்கள்.


தற்போதுள்ள மாணவர் தொகைக்கு ஏற்பபோதிய வளம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இப்பாடசாலையில் 96 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஆரம்பப் பிரிவில் 46 ஆண், பெண் மாணவர்களும், இடைநிலைப்பிரிவில் 50 மாணவர்களும் கல்வி கற்று வருகின்றனர்.

இவ்வாறு மாணவர் தொகைக்கேற்ப ஆசிரியர் வளம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும பௌதீக வளங்கள், ஆளணித்துவங்கள் ஆகியவற்றை நிறைவேற்றுவதனை உங்களது கோரிக்கையினை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சாதகமாக பரிசீலித்து பாடசாலையின் பௌதீக வளத்தேவைகளை நிறைவேற்றித்தருவார். ஆகவே, பெற்றோர்களாகிய நீங்கள் இப்பாடசாலையின் உயர்வுக்கு துணையாக இருக்கவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், கரவெட்டி பிரதேச இணைப்பாளர் எஸ். செந்தில்நாதன் ஆகியோருடன் பாடசாலை சமூகத்தவர்களும் கலந்துகொண்டனர். (116)

# நேரம் காட்டத்தொடங்கியது யாழ்.மணிக்கூட்டுக் கோபுரம்

(யாழ்ப்பாணம்)



யாழ்.மணிக்கூட்டுக்கோபுர மணிக்கூடுகள் நான்கும் புதிதாக பொருத்தப்பட்டு நேற்று முதல் செயற்பட ஆரம்பித்துள்ளன.

யாழ்.மாநகரசபை நிதியில் இருந்து ஒன்பது இலட்சத்து 27 ஆயிரம் ரூபா செலவில் யாழ். மாநகரசபை முதல்வரின் முயற்சியின் பயனாக இந்த மணிக்கூட்டுக் கோபுரத்தின் பழுதடைந்த நான்கு மணிக்கூடுகளும் அகற்றப்பட்டு புதிய நான்கு மணிக்கூடுகள் பொருத்தப்பட்டு நேற்று முதல் செயற்பட்டு வருகின்றன.

அத்துடன் இந்த மணிக்கூட்டுக் கோபுரமும் புனரமைக்கப்பட்டு வெள்ளை வர்ணப் பூச்சுடன் மிகவும் அழகாக காட்சியளிக்கின்றது.

ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த மணிக்கூடு டிஜிற்றல் முறையைக் கொண்டது. ஆனால் தற்சமயம் பொருத்தப்பட்டிருப்பது முள் மணிக்கூடு என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மணிக்கூட்டுக் கோபுர மணிக்கூடுகள் யுத்த சூழ்நிலை காரணமாக அதன் பின்னரும் பல தடவை செயலிழந்து போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா,68)

# விழிப்புணர்வுக்கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் அனுசரணையுடன் சமூக நலனோன்பு நலன்திட்டத்தின் கீழ் இலங்கை வைத்திய நிபுணர் கழகமும் தேசிய பாரிசவாத சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள பொதுமக்களுக்கான இலவச மருத்துவ விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.போதனா வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டு பொது மக்கள் மற்றும் நோயாளர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்கவுள்ளனர்.

# பேச்சுத்திறன் வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பாலர் கல்விக்கழக நிர்வாகத்திற்குட்பட்ட ஞானக்குழந்தை இல்லப்பாலர் பாடசாலைகள் இணைந்து நடத்தும் பேச்சுத்திறன் காணும் வைபவம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பாலர் கல்விக்கழகத்தின் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மானிப்பாய் சத்தியசாயி பாடசாலை அதிபர் திருமதி.பரிமளம் பத்மநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

# சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்

(யாழ்ப்பாணம்)



கரவெட்டி, துன்னாலை தெற்கைச் சேர்ந்த நல்.கணேசன் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் சோவியத் ரஷ்யாவில் மொஸ்கோ தொழிற்சங்கப் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார்.

துன்னாலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கரவெட்டி, ஞானாசாரியார் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தின் தொழிலுறவு அலுவலரான இவர் மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் பொதுஜனத் தொடர்பு அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.

இவர் கல்கிஸ்ஸ மாவட்ட மேலதிக நீதிபதி பிரதீப்.எம்.அபேரத்ன முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். (01)

# கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு நல்லூரில் இன்று மணி விழா

(திருநெல்வேலி)

வாகீச கலாநிதி செஞ்சொல்வாணர் நவரஸக் கலைஞானி டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் (அகில இலங்கை சமாதான நீதிவான்) மணிவிழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மணிவிழாக்குழுத்தலைவர் அதிபர் வரதராஜ சர்மா ஸ்ரீகாந்தன் தலைமையில் நடைபெறும் விழாவில் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் திருமதி இலட்சுமணன் இளங்கோவன் தம்பதியர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக முன்னாள் அரசாங்க அதிபரும், சமூக சேவைகள் அமைச்சு செயலாளருமான திருமதி சுகுமார் இமெல்டா தம்பதியினரும் யாழ்ப்பாண பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரராஜா வடமாகாண கல்வி அமைச்சு செயலாளருமான எஸ்.சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விழாவில் திருமதி சிவலிங்கம் தம்பதியர், திருமதி சுதாகரன் தம்பதியர், திருமதி கணநாதன் தம்பதியர் ஆகியோர் மங்களவிளக்கேற்றுவர்.

தேவாரத்தினை இசைக்கலைமாணி செல்வி நவரத்தினம் தனகௌரி, வரவேற்பு நடனத்தை கலைஞர் சசிகாந்தன் குழுவினர், வரவேற்புரையினை மணிவிழாக்குழு செயலாளர் திருமதி சசிரஜனி குகானந்தன் அருளாசியுரையினை நல்லை திருஞான சம்பந்த ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசார்ய சுவாமிகள், ஆசியுரைகளை காயத்திரிபீட அதிபர் சிவஸ்ரீதாணு மகாதேவக் குருக்கள், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவ குரு சிவஸ்ரீ வை. மு.ப. முத்துக்குமாரசுவாமி குருக்கள், நயினை ஸ்ரீநாக பூஷணி அம்மன் தேவஸ்தான ஆதினகுரு சிவஸ்ரீ கைலை வாமதேவக் குருக்கள், ஸ்ரீநாகபூசணி அம்மன் ஆதினகுரு சிவஸ்ரீ பால கணேசக்குருக் கள் ஆகியோர் வழங்கவுள்ளனர். (60)



அசசுவேலயில புதிதாக அமைககபபடடுளள பொலிஸ நிலையம நேறறு முனதினம திறநதுவைககபபடடது. இநநிகழவில பொலிஸாரின வரவேறபுககான அணிவகுபபு நிகழவையும, வடமாகாண சிரேஸட பிரதிபபொலிஸ மா அதிபர பி.ஜி.எஸ.காமினி.டீ.சிலவா நிலையததை திறநதுவைபபதனையும, திறநது வைககபபடட புதிய நிலையததையும காணலாம். (15)

ஒவ்வொருவரும் உலகத்தை மாற்ற நினைக்கிறார்களேயொழிய தம்மை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை. - ஆபிரகாம் லிங்கன்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இதைத்தான் நாம் செய்தாக வேண்டும்

தமிழ்நாட்டின் திராவிட அரசியல் பாரம்பரியத்தில் "மன்னிப்போம்! மறப்போம்!" என்ற சுலோகம் வெகு பிரபலமானது. திராவிடத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு தேசிய நீரோட்டத்தில் இணைந்தபோதும், இந்திய தேசியத் தலைமைகளுடன் பகைமறந்து மாறி மாறிக் கூட்டணி அமைத்துக் கொள்ளும் போதும் திராவிடத் தலைவர்கள் தம் தொண்டர்களிடம் பெருந்தன்மையோடு சொல்லிக் கொள்ளும் வாக்கியம் அது.

அந்தப் பெருந்தன்மையான அரசியல் சுலோகத்தின் மூலமே, வட நாட்டானை விரட்டித் தனிநாடு அமைப்போம் என்ற தீவிர நிலைப்பாட்டை மென்மைப்படுத்தி, மாநில அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டனர். "வடக்கு வாழ்கிறது; தெற்குத் தேய்கிறது" என்ற உணர்ச்சிகரக் கோஷங்களைக் கைவிட்டு, "நேருவின் மகளே வருக; நிலையான ஆட்சி தருக!" என்று இணக்க அரசியலைக் கையிலெடுத்து வென்றார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால், அந்தத் தலைவர்கள், ஈழத்தமிழர்களின் பிரச்சினை என்று வருகிறபோது, "மன்னிக்காதீர்கள்; மறக்காதீர்கள்" என்று பகையுணர்ச்சியை வற்ற விடாமல் பாடம் நடத்துவதுதான்! எவ்வளவு காலத்துக்குத்தான் பகையிலும் ரோசத்திலும் வாழ்வை அழித்துக் கொண்டிருப்பது?

ஏன் எங்களால் யாரையும் மன்னிக்க முடியாமல் இருக்கிறது? உடனேயே, மன்னிக்கக்கூடிய கொடுமைகளையா அவர்கள் செய்தார்கள் என்று உணர்ச்சி பொங்கக் கொதித்தெழும்புவதே எங்கள் 'வீர' இயல்பாக இருக்கிறது. அறிவுபூர்வமாகச் சிந்தித்து மக்களைக் காக்கும் விதமாக யோசிக்க நாம் இப்போது கூட முன்வருவதாயில்லை.

ஒருவேளை, எங்களால் யாரிடமும் மன்னிப்புக் கேட்க முடியாமலிருப்பதுதான், அவர்களையும் எங்களால் மன்னிக்க முடியாதிருப்பதற்குக் காரணமாக இருக்கிறதோ என்னவோ! எங்கள் தரப்பில் செய்த மாபெரும் தவறுகள், அநீதிகள் பற்றி கடைக்கண்ணால் கூட திரும்பிப் பார்க்க நமக்கு விருப்பமில்லை. அப்படிப் பார்த்து நமது குற்றங்களும் இருப்பதாய்ச் சொல்கிறவர்களை, துரோகிகள் என்று இப்போதும் யாராவது போட்டுத் தள்ளிவிட மாட்டார்களா என்று சிலருக்கு வெளிப்படையான ஏக்கமும், பலருக்கு இரகசியமான ஆசையுமே இருக்கிறது!

நம் தரப்புப் பிழைகளை உணர்ந்து வெளிப்படுத்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டுவிடுவதன் மூலம்தான், அதுமாதிரியான தவறுகளுக்கு நாம் மீண்டும் போகாமலிருக்க முடியும். அதுமட்டுமல்ல, மற்றவர்களும் தங்கள் பிழைகளைப் பேசும் தளர்வான சூழ்நிலை உருவாகும். அதன்மூலம்தான் ரணங்கள் ஆறும்.

பரஸ்பரம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் சூழல் உருவானால்தான், பேச்சுவார்த்தை ஆயுதத்தால் நாம் பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். சிங்களத்தரப்பு, இந்தியத்தரப்பு, தமிழ்நாட்டுத்தரப்பு, ஈழத்தமிழர்கள் தரப்பு, புலம்பெயர்ந்தோர் தரப்பு என எல்லோருமே மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் சூழலை உருவாக்குவது பற்றியே நம் முயற்சி, பேச்சு, எண்ணம் எல்லாம் அமைய வேண்டும்.

முதலில் நாமே மன்னிப்புகளைக் கேட்க ஆரம்பிப்பதில் என்ன குறைந்துவிடும்? 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்களைத் துரத்தினதுக்கு, பள்ளிவாசலினுள்ளும் மற்றும் இடங்களிலும் கொலைகளைச் செய்ததுக்கு, அநுராதபுரம், அரந்தலாவை, தலதா மாளிகை மற்றும் பொதுஇடங்களில் நடந்த கொலைகள், இந்தியத் தலைவர் கொலை, இன்னுமின்னும் தமிழ்த் தரப்பால் நடந்த கொலைகள் எல்லாவற்றுக்கும் பெரிய மன்னிப்பை, அவரவர்களிடம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயமே கேட்க வேண்டும்.

இவ்வாறு மன்னிப்பதன், மறப்பதன் மூலமே நமக்கும் எல்லோருக்குமான நல்வாழ்வுக்கு நாமனைவருமே திரும்ப முடியும். வெறுப்பால் மக்களைத் திரட்டுவதை விட இதற்குத் திரட்டுவது மிகக் கடினமான காரியம்தான். ஆனால், இதைத்தான் நாம் செய்தாக வேண்டும். - ஆசிரியர்

# வடக்கு மாகாண தேர்தல் நடந்தால்

# ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி

## என்கிறார் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

வடக்குத் தேர்தலில் வெற்றி பெறுவது ஆளுங்கட்சியா அல்லது எதிர்க்கட்சியா என்பது முக்கியமில்லை. வடக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் அது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்றும் இளைஞர் விவகார அமைச்சரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு, வடக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கத்தவர்களை இணைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

வடக்குத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பா, அரசா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியா வெற்றி பெறும் என்பது முக்கியமில்லை. மாறாக, வடக்குத் தேர்தல் நடத்தப்பட்டால் அது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும். மாகாணசபை முறைமையை அறிமுகப்படுத்தத்தான் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இருப்பினும், கடந்த 30 வருட காலமாக வடக்கில் தேர்தலை நடத்த முடியவில்லை. அதனால் அங்கு தேர்தல் நடத்தப்பட்டால் அது நாட்டின் ஜனநாயகத்துக்குக் கிடைக்கும் பெரும் வெற்றியாகும் என்று தெரிவித்தார்.

# விடைத்தாள் மீள் திருத்தம் விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2012 க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் விடைத்தாள் மீள் திருத்தத்திற்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மே மாதம் 10 ஆம் திகதி வரை மாணவர்கள் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர் மூலம் தங்களது விண்ணப்பத்தை அனுப்பி வைக்க முடியும்.

தனியார் பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கலாம். 2012 க.பொ.த, (சா/த) பரீட்சை பெறுபேறுகள் நேற்று இரவு வெளியானமை குறிப்பிடத்தக்கது.

## சாதாரணதர மாணவர் நலன் கருதி

# ஆட்பதிவுத் திணைக்கள சேவை மாவட்டரீதியில் நடைபெறும்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டையினை வழங்குவதற்காக மாவட்ட அடிப்படையில் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் சென்று தேவையான தகவல்களை பெறும் வேலைத் திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது பற்றி சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் சேர்த்துக் கொள்வதுடன், விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படுவதில் பிழைகள் இருக்குமாயின் அவ்விடத்திலேயே திருத்திக் கொள்வர்.

இதன் மூலம், பாடசாலை அதிபர்கள் கொழும்பிலுள்ள ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு சமுகமளிப்பது தவிர்க்கப்படும் எனத் தெரிவித்துள்ள ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர், இந்நடைமுறை க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் கல்முனைக் கல்வி மாவட்டத்திற்கு ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் ஏப்ரல் 22 ஆம் திகதி முதல் பாடசாலைகளுக்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# விவசாயத்துறை பட்டதாரிகள் 50 பேருக்கு பயிலுநர் நியமனம்

யாழ். மாவட்ட விவசாயத்துறை பட்டதாரிகளுக்கு பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பு நியமனம் வழங்கப்பட்டது. யாழ். நல்லூர் பிரதேச செயலகத்தில் நல்லூர் பிரதேச செயலர் செந்தில்நந்தனன் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில், விவசாயத்துறை பட்டதாரிகள் 50 பேருக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் நியமனங்களை வழங்கி வைத்தனர். (25)

# மீள்குடியேற்றம் பூர்த்தி இல்லை முஸ்லிம் அமைச்சர்களே காரணம்

## பொதுபலசேனா குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கில் மீள்குடியேற்றம் முழுமையாக பூர்த்தியாகவில்லை என்று தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் குற்றம் சுமத்துவது உண்மையாகும்.

முஸ்லிம் அமைச்சர்கள் வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் காணிகளை ஆக்கிரமித்து அடிப்படைவாத முஸ்லிம்களுக்கு அவ்விடங்களை வழங்கியுள்ளமையால் தமிழ் மக்களை மீள் குடியமர்த்த முடிவதில்லை என்று பொதுபலசேனா குற்றம் சாட்டியுள்ளது.

இவ்வாறான அடிப்படைவாத சக்திகளின் ஆக்கிரமிப்புகளை தடுக்கவும் பல்துறைகளில் இலங்கை கண்டுள்ள பின்னடைவுகளை சீர்செய்து முழுமையான பௌத்த கலாசாரத்திற்குள் ஏனைய சமூகத்தினையும் சம உரிமைகளுடன் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதற்கான விஷேட தேசிய தீர்மானங்களை இரு மாதத்திற்குள் வெளியிடவுள்ளதாகவும் அவ அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு-7, தும்முல்லை சந்தியில் அமைந்துள்ள பொதுபலசேனாவின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து பொதுபலசேனாவின் அமைப்பாளர் டிலானந்த விதானகே கூறுகையில்,

முஸ்லிம் மக்களையோ பள்ளிவாசல்களையோ பொதுபலசேனா உடைக்கவோ, தாக்கவோ இல்லை. ஆனால், பல அடிப்படைவாத சக்திகள் பொதுபலசேனா மீது வீண் பழிகளை சுமத்தி வருகின்றன. ஹலால் விடயத்திலும் அவ்வாறே குற்றம் சுமத்தப்படுகின்றது.

பௌத்தர்கள் ஹலாலை புறக்கணிக்க வேண்டும் என்று கூறும் போது அதனை திரிபுபடுத்தி இலங்கையில் ஹலாலை தடைசெய்ய வேண்டும் என்ற பிரசாரத்தை குறிப்பிட்டு சில குழுக்கள் பரப்புகின்றன.

முஸ்லிம்கள் எமது சகோதரர்களே, அவர்களை முஸ்லிம் அடிப்படைவாதிகளிடமிருந்து பாதுகாக்க வேண்டியது நம் அனைவரினதும் கடமையாகும். அரசாங்கத்திற்குள் உள்ள அடிப்படைவாதத்திற்கு துணை செல்லும் முஸ்லிம் அமைச்சர்கள் வன்னியில் தமிழ் மக்களின் காணிகளை சூறையாடி அவற்றை அடிப்படைவாத முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளனர். இவற்றை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

மருதன் கட்டுரையிலிருந்து



# அடையாளம், இனவாதம், வெறுப்பு அரசியல்

விளையாட்டு வீரர்களைத் திருப்பி அனுப்பியது ஓர் அரசின் செயல்பாடு. புத்த பிட்சுக்களின் மீது தாக்குதல் நடத்தியது சில தனிமனிதர்களின் செயற்பாடு. ஒரு நாட்டு அரசின் செயற்பாடும் அந்நாட்டு மக்கள் சிலரின் செயற்பாடும் ஒன்றா என்பதுதான் கேள்வி. நிச்சயம் வெவ்வேறுதான். அதே சமயம் இரண்டுமே ஆபத்தானவை என்பதால் இரண்டும் சேர்த்தேதான் எதிர்க்கப்பட வேண்டும்.

சிங்கள அரசு, தமிழர்களை அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஒடுக்குவது நியாயமல்ல என்றால் சிங்களர்களை அவர்கள் சிங்களவர்கள் என்ற ஒரே காரணத்துக்காகத் தமிழக அரசு ஒடுக்குவதும் நியாயமற்றதுதான்.

ஆனால், நம்மில் பலரால் சிங்களவர்களின் செயற்பாடுகளையும் தமிழகத்தின் செயற்பாடுகளையும் ஒரே நேர்கோட்டில் வைத்து பார்க்கமுடியவில்லை. அதற்கு மனம் ஒப்பவில்லை. பல கேள்விகள் அலைமோதுகின்றன. பல்லாயிரம் பேரைக் கொன்றவர்களும் கல்லெறிபவர்களும் ஒன்றா? இருவருக்கும் ஒரே நீதியா? இருவருடைய குற்றங்களையும்

முழு விழிப்புடனும் சுயநினைவுடனும் இருக்கவேண்டிய அவசியம் நமக்குத்தான் இருக்கிறது. இயல்பாக நம்முள்ளே எழுந்தாலும் சரி, செயற்கையாக வெளியில் இருந்து தூண்டி விடப்பட்டாலும் சரி, ஆபத்தான வெறுப்பு அரசியல் வளையத்துக்குள் நாம் சிக்கிக்கொள்ளக் கூடாது. இதிலிருந்து வெளிவருவதற்கான ஒரே வழி, வரலாற்றை ஆழமாகவும் அகலமாகவும் கற்பதும், கற்றதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதும் மட்டும்தான்.

ஒன்றுபோல் பாவித்து தீர்ப்பு எழுதுவது சாத்தியமா? படுகொலை செய்பவர்கள்மீது ஆத்திரப்பட்டு சிறு கல் வீசினால் அது கொடுஞ்செயல் ஆகிவிடுமா?

இந்தக் கேள்விகளுக்கு விடை தேடவேண்டுமானல், இவற்றோடு சேர்த்து இன்னும் இரு கேள்விகளை நாம் எழுப்பவேண்டும்.

- ஒரு நாட்டின் அரசையும் அதன் மக்களையும் ஒன்றுபோல் பாவிக்க வேண்டுமா?
- ஒரு நாட்டின் செயற்பாடுகளுக்கு அந்நாட்டு மக்களும் பொறுப்பேற்க வேண்டுமா?

எனில், அமெரிக்க அரசின் செயற்பாடுகளை எதிர்க்கும் ஒருவர், அமெரிக்கர்கள் அனைவரையும் எதிர்த்தாக வேண்டுமா? சோவியத் ரஷ்யாவை அல்லது செஞ்சீனத்தை ஏற்கும் ஒருவர் ஒவ்வொரு ரஷ்யரையும் ஒவ்வொரு சீனரையும் அரவணைக்க வேண்டுமா?

ஒருவருடைய அடையாளம் என்பது என்ன? என்னும் ஆதாரமான கேள்வி இங்கே எழுகிறது. The Argumentative Indian புத்தகத்தில் அமர்த்தியா சென் இதுபற்றி விவாதிக்கிறார். ஒருவர் பட்டம் பெற்றவராக இருக்கிறார். அவர் ஒரு வங்கியில் பணிபுரிகிறார். அவருக்கு கால்பந்து பிடிக்கும். அவருக்கு ஒரு குறிப்பிட்ட அரசியல் பார்வை இருக்கிறது. அவர் மாலை நேரங்களில் தன் வீட்டுத் தோட்டங்களைப் பராமரிக்கிறார். அவர் ஒரு கணவர். தன் மகனுக்குத் தகப்பன். அவர் கற்றறிந்தவர். அவர் ஒரு இந்தியர். அவர் ஒரு முஸ்லிம். இதில் எது அவருடைய அடையாளம்? எந்த அம்சத்தை அல்லது அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு அவர்மீதான மதிப்பீடு முன்வைக்கப்படுகிறது? எந்த அடையாளத்தைக் கொண்டு அவர் ஏற்கப்படுகிறார் அல்லது நிராகரிக்கப்படுகிறார்? அவரைப் பற்றி நாம் உருவாக்கிக்கொள்ளும் பிம்பம் எத்தகையது? இது மிகவும் முக்கியமானதொரு கேள்வி. காரணம், இந்தப் பிம்பத்தை வைத்துதான் நாம் அவரை எதிர்கொள்கிறோம்.

மஹிந்த ராஜபக்ஷவுக்குத் துணை நிற்கும் அவருடைய அரசையும் ராணுவத்தையும் எதிர்க்கவேண்டும். அதே வரிசையில், சிங்களப் பேரினவாதம் எதிர்க்கப்பட வேண்டியது. ஆனால் சிங்களர்கள் அனைவரும் எதிர்க்கப்பட வேண்டியவர்களா?

அமெரிக்க எதிர்ப்பு என்பது அனைத்து அமெரிக்கர்களையும் எதிர்ப்பது என்று நாம் அர்த்தப்படுத்திக்கொண்டால், நோம் சோம்ஸ்கி, ஹோவர்ட் ஜின், போப் அவுட்வேர்ட் உள்ளிட்ட அமெரிக்க விமரிசகர்களையும் சேர்த்தேதான் நாம் எதிர்க்க வேண்டியிருக்கும்.

சிங்கள அரசைக் கடுமையாகச் சாடி பலியான லசந்த விக்கிரமதுங்கவை ஒரு சிங்களவர் என்பதற்காக நாம் எதிர்க்கவேண்டுமா என்ன?

எதிர்க்க வேண்டியது சிங்கள இனவாத அரசைத்தான் சிங்களவர்களை அல்ல. இந்த உண்மை தெரிந்தேதான் இங்குள்ள அரசியல் கட்சிகளும் சில இயக்கங்களும் வெறுப்பு அரசியலை மக்களிடையே பரப்பிவிடுகின்றன. அவற்றுக்கு நாம் இரையாகக்கூடாது.

ஒரு நாட்டிலுள்ள பெரும்பான்மை இனம் அதன் சிறுபான்மை இன மக்களை எப்படி நடத்துகிறது என்பதைத் தொடர்ச்சியாக கவனித்து, ஒடுக்கப்படும் சிறுபான்மை இனத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கவேண்டியது அந்நாட்டு மக்களின் தார்மீகக் கடமையாகும். இந்த அளவுகோலின் அடிப்படையில்தான் இலங்கைப் பிரச்சினையை நாம் கவனிக்கவேண்டும். அங்கே ஒருவேளை சிங்களவர்கள் சிறுபான்மையினராக இருந்து, பெரும்பான்மை தமிழர்களால் அவர்கள் ஒடுக்கப்பட்டால், அப்போது நாம் சிங்களவர்களுக்கு ஆதரவாகத்தான் குரல் கொடுக்கவேண்டும். நம் இனம், நம் மொழி, தொப்புள்கொடி உறவு போன்ற பதங்களை அப்போது பயன்படுத்தமுடியாது என்றபோதிலும்.

'சிங்களவர்கள்' என்னும் அடையாளத்தை இப்போது மூன்றாகப் பிரிக்கலாம்.

- இனவாதக் கொள்கையை ஏற்பவர்கள் / அவற்றால் பலனடைபவர்கள்.
- இனவாதக் கொள்கைகளை ஏற்காதவர்கள் / அவற்றை எதிர்ப்பவர்கள்.
- அரசியல் பார்வை ஏதுமற்றவர்கள்.

சிங்களப் பேரினவாதத்துக்கு எதிரான நம் போராட்டத்தில் இரண்டாவது பிரிவினரை நாம் ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும்.

மூன்றாவது பிரிவினரை வென்றெடுக்க வேண்டும்.

முதல் பிரிவினர் எதிர்க்கப்பட வேண்டியவர்கள்.

எப்படிப் பார்த்தாலும், சிங்களர்களோடு உரையாடாமல், அவர்களை இணைத்துக்கொள்ளாமல், அவர்களோடு முரண்படாமல் இலங்கைத் தமிழர் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. சிங்களர்களை அவர்கள் சிங்களர்கள் என்னும் ஒரே காரணத்துக்காக ஒதுக்குவது பிரச்சினையின் தீவிரத்தை அதிகரிக்கவே செய்யும்.

சிங்கள அரசின்மீதான கோபத்தை சிங்களர்கள்மீது செலுத்துவதும் அதற்குத் துணை போவதும் சிங்கள அரசுக்கு சாதகமான செயல்பாடாகத்தான் இருக்கும். அரசியல் பார்வை ஏதுமற்ற சிங்களர்களும்கூட தங்கள் அரசோடு வேறுவழியின்றி ஒன்றிப்போகும் அபாயமும் ஏற்படும். ஆட்சியாளர்களைப் போலன்றி, பாட்டாளி வர்க்கம் சர்வதேசத்தன்மை கொண்டிருக்க வேண்டியது அவசியம். மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, மக்கள் போராட்டமாக இருந்தாலும் சரி. பாதிக்கப்பட்ட சிங்களவர்களுக்கும் சேர்த்து குரல் கொடுத்து அவர்களையும் ஒன்றிணைத்து போராடுவதன்மூலம் மட்டுமே ஒடுக்கப்படும் தமிழர்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரமுடியும்.

பாலச்சந்திரன் படத்தை வைத்துக்கொண்டுதானே போராடுகிறார்கள்? அந்த படத்தை எடுத்தவரும், அதை வெளியிட உதவி செய்தவரும் நிச்சயம் ஒரு சிங்களராகத்தானே (பெரும்பாலும் இராணுவவீரராக) இருக்கவேண்டும்? அவர் இல்லாமல் இந்த விஷயம் எப்படி வெளிவந்திருக்கும்? சிங்களவர்கள் எல்லோருமே இரத்த வெறியர்களா என்ன?

முழு விழிப்புடனும் சுயநினைவுடனும் இருக்கவேண்டிய அவசியம் நமக்குத்தான் இருக்கிறது. இயல்பாக நம்முள்ளே எழுந்தாலும் சரி, செயற்கையாக வெளியில் இருந்து தூண்டிவிடப்பட்டாலும் சரி, ஆபத்தான வெறுப்பு அரசியல் வளையத்துக்குள் நாம் சிக்கிக்கொள்ளக்கூடாது. இதிலிருந்து வெளிவருவதற்கான ஒரே வழி, வரலாற்றை ஆழமாகவும் அகலமாகவும் கற்பதும், கற்றதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதும் மட்டும்தான்.

இலங்கைத்தமிழர்களுக்கு ஏதேனும் நல்லது செய்யவேண்டும் என்றால் அதை இந்தியா செய்தால்தான் உண்டு.... அதையும் ராஜாங்க ரீதியாக, பொருளாதார ரீதியாக அழுத்தம் கொடுப்பதன் மூலம்தான் செய்ய முடியும்.... இலங்கையுடன் நட்பை துண்டித்துக்கொண்டால் பிறகு அவர்களுடன் எப்படி பேசுவதாம்?


ஐ.நா.வெல்லாம் வேஸ்ட்.... இஸ்ரேல் ஒரு உதாரணம்.... சுற்றிலும் உள்ள அனைத்து நாடுகளின் கண்களிலும் விரல்விட்டு ஆட்டும் இஸ்ரேலை ஐ.நா.வால் ஒரு முடியைக்கூட தொட முடியவில்லை,.... காரணம் அமெரிக்க ஆதரவு... இதுவரை ஐ.நா. சபையில் இஸ்ரேலுக்கு எதிராக நூற்றுக்கணக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும், ஒன்றைக்கூட அமுல்படுத்த முடியவில்லை.... காரணம், வீட்டோ பவர் உள்ள அமெரிக்கா அனைத்தையும் ரத்து செய்துவிடுகிறது....

இலங்கைக்கு இப்போது வீட்டோ அதிகாரம் உள்ள ரஷ்யாவும், சீனாவும் ஆதரவாக உள்ளன.... பின்னர் பொதுவாக்கெடுப்பும், தனி ஈழமும் எப்படி சாத்தியம்....?

மாயமான் வேட்டை ஆடுவது அரசியல்வாதிகளின் பிழைப்பு.... அதை நம்புவதும், புறந்தள்ளுவதும் அவரவர் அறிவின்பாற்பட்டது....

# உயிரிழந்தவர்களின் விபரங்களைப் பெற வெளிநாட்டு உதவிகள் அவசியம்

## – என்கிறார் ருவான் வனிகசூரிய



யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்தவர்கள் பற்றிய சரியான புள்ளி விபரங்களை வெளியிட வெளிநாட்டு உதவிகள் அவசியமானது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்த விடுதலைப் புலி உறுப்பினர்கள் மற்றும் இயற்கைக் காரணங்களினால் உயிரிழந்தவர்கள் பற்றிய சகல விபரங்களையும் திரட்டுவதற்கு வெளிநாடுகளின் ஒத்துழைப்பு அவசியம் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.


யுத்தம் இடம்பெற்ற காலத்தில் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்கள் பற்றிய துல்லியமான தகவல்களின் அடிப்படையிலேயே உயிரிழந்தோர் தொடர்பான சரியான தகவல்களை வெளியிட முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தத்தின் போது உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்ட சிலர் தற்போது வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற சில விடுதலைப் புலி உறுப்பினர்களை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் பொது மக்கள் என அடையாளப்படுத்தி வருவதாகத் தெரிவித்துள்ளார். கடந்த ஆறு ஆண்டுகளில் 25000 இலங்கையர்களுக்கு கனடாவில் நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு குடிவரவு அமைச்சர் ஜேசன் கென்னி தெரிவித்திருந்தார்.

யுத்த காலத்தில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் முரண்பட்ட தகவல்களையே சர்வதேச ஊடகங்களும் வெளியிட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். சில ஊடகங்கள் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்தும் முனைப்புக்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

புலிகள் யுத்த ரீதியாக தோற்கடிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் சில தனி நாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ஆஸி செல்ல முயற்சித்த 35பேர் நடுக்கடலில் கைது



சட்டவிரோதமான முறையில் அவுஸ்ரேலியா செல்ல முயற்சித்த 35 பேர் கடலில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். பேருவளை மீன்பிடித்துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் அவுஸ்ரேலியா நோக்கிச் சென்ற அவர்கள், காலி கடற்படையினரால் கைது செய்யப்பட்டு துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 11 பெண்கள் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மஹபாகே, அம்பாறை, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, பேருவளை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, புத்தளம் மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. குற்றத் தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கைக்குண்டு வெடித்து நால்வர் காயம்

பொலன்னறுவை - கதுருவெல பகுதியில் நேற்று முன்தினம் மாலை கைக்குண்டு வெடித்து நால்வர் காயமடைந்துள்ளனர்.

பிரதேச வீடொன்றில் இந்தக் கைக்குண்டு வெடித்துள்ளது. வெடிப்பில் இரு பெண்களும், இரு ஆண்களும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சிறு காயங்களுக்கு உள்ளான இருவர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கைக்குண்டு வெடிப்புக் குறித்து பொலனறுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சேது சமுத்திரத் திட்டத்தின் மூலம் இலங்கை கடல் வளங்களுக்கு ஆபத்து

## – நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

சேது சமுத்திரத் திட்டமானது இலங்கை கடல் வளங்களுக்கு ஆபத்தாக அமையக் கூடுமென இலங்கை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். கடல் ஆய்வாளர்கள், சூழலியலாளர்கள், பூகோளவியலாளர்கள் மற்றும் கடல்வளப் பொறியியலாளர்கள் கூட்டாக இணைந்து இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கையின் கடல் வளங்களுக்கு பாரியளவில் பாதிப்பு ஏற்படக் கூடிய அபாயம் நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இந்தியா சகல விதமான சர்வதேச கடல்வளப் பாதுகாப்பு சட்டங்களையும் உதாசீனம் செய்து, சேது சமுத்திரத் திட்டத்தை முன்னெடுக்க முயற்சிப்பதாக இவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவினர், சேது சமுத்திரத் திட்டத்தின் நன்மை தீமைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். சேதுசமுத்திரத் திட்டமானது இலங்கை இந்திய சர்வதேச கடல் எல்லைப்பரப்பில் அமைந்துள்ளது.

இவ்வாறான ஓர் பின்னணியில் சேது சமுத்திரத் திட்டம் தொடர்பில் இந்திய அரசாங்கம் இலங்கை கல் வளங்கள் பற்றி கவனம் செலுத்தாமை வருத்தமளிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது

.சர்வதேச கடல் வளப் பாதுகாப்புச் சட்டங்களுக்கு புறம்பாக இந்தியா செயற்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்தினால் இலங்கை கடல் வளங்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்கள் குறித்த சரியான மதிப்பீடுகள் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பில் டெங்கு மீண்டும் தீவிரம்

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்துள்ளதாக கொழும்பு மாவட்ட சுகாதார வைத்தியர் திலகசிறிவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, நிறைவடைந்த மார்ச் மாதத்தில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 சதவீதமாக அதிகரித்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலன்னாவை பகுதியிலேயே இந்த விடயத்தில் அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பொது மக்கள் இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

# சிங்கத்தைச் சீண்டிப்பார்க்க முயற்சிக்கிறது தமிழகம்

## – எச்சரிக்கிறார் மேர்வின்



சிங்கத்தைச் சீண்டிப்பார்க்க முயற்சிக்கக் கூடாது என மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார். சிங்கத்தைச் சீண்டி தமிழகம் காயமடையப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்துடன் சிறந்த உறவுகள் காணப்படுவதாகவும், சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் ஆற்றல் ஜனாதிபதிக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், உறங்கும் சிங்கத்தை எழுப்பி காயமடைய வேண்டாம் என தமிழகத்தை எச்சரிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கு எதிராக தமிழக திரைநட்சத்திரங்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்தையும் அமைச்சர் விமர்சனம் செய்துள்ளார்.

மெய்யான ஹீரோக்களாக இருந்தால் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருந்திருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். இடைநடுவில் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டிருக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்ள முடியவில்லை என அமைச்சர் மேர்வின் மேலும் தெரிவித்துள்ளார்.

# மதப்பாகுபாட்டுக்கு இங்கு இடமில்லை



எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மத ரீதியில் பிளவுபட்டு பிரிந்து செயற்பட இடமளிக்கப்படமாட்டாது என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். நாட்டில் எவரையும் துன்புறுத்த இடமளிக்கப்படமாட்டாது என கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன மற்றும் மதங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதே அரசின் எதிர்பார்ப்பு எனவும் அதற்காக செயற்பட அரசு முன்நிற்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எனினும், அண்மைக்காலமாக நாட்டின் சில பகுதிகளில் சிற்சில சந்தர்ப்பங்களில் துரதிஷ்டமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அதற்கு அரசாங்கத்திற்கோ அரசுடன் இணைந்துள்ள எந்தவொரு அரசியல் கட்சிக்கோ தொடர்பில்லை என அமைச்சர் கூறினார். இதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நாட்டை முன்னேற்றும் நீல அலை வேலைத் திட்டம் நாடு முழுவதும் வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். சரத் பொன்சேகா ஆரம்பித்துள்ள புதிய அரசியல் கட்சியால் தமக்கு எதுவித சவால்களும் இல்லை எனவும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

# மகன் சித்தியடையத் தவறியதால் தந்தை தூக்கிட்டுத் தற்கொலை

ஹட்டன் - வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொசல்ல பகுதியில் தந்தை ஒருவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக வட்ட வளை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் வெளியான க.பொ.த. சா/த பரீட்சைப் பெறுபேறுகளின்படி தனது மகன் சித்தியடையாமை காரணமாக வீட்டில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் மனவிரக்தி அடைந்த தந்தை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக வட்டவளை பொலி ஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது.


சடலம் தற்போது வட்டவளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதை வட்டவளை வைத்தியசாலை வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார். மரணம் குறித்த நீதவான் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# முன்பிணை கோரிய நிறைவேற்று அதிகாரி

தெயட்ட கிருள தேசிய பொருட்காட்சி 2013இன் பிரதம நிறைவேற்று அதிகாரியாகச் செயற்பட்ட தகவல் தொலைத்தொடர்பு அமைச்சின் மேலதிக செயலாளர் நீதிமன்றில் முன்பிணைமனு தாக்கல் செய்துள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன் மீது சுமத்தியுள்ள குற்றச்சாட்டின் பேரில்தான் கைது செய்யப்படலாம் என எதிர்பார்த்தே இவர் கடந்த புதன்கிழமை முன்பிணை கேட்டு விண்ணப்பித்துள்ளார். காந்தி குணவர்த்தன என்ற அதிகாரிக்கு எதிராக 39 மில்லியன் ரூபா நிதியைக்கையாடியுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாக நீதிமன்றில் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்தே இவர் முன்பிணை கோரியுள்ளார்.

# தென்மராட்சிப் பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்



(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் மேம்பாடு தொடர்பில் ஆய்வுக் கலந்துரையாடலொன்று சாவகச்சேரி வலயக் கல்வி அலுவலகத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் விசேட அதிதியாக கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) பாடசாலை அதிபர்களுடன் விசேட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது ஊட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு சம்பந்தமான ஆய்வுக்கூட்டமாக மேற்படி கலந்துரையாடல் இடம்பெறறது.

தென்மராட்சி பிரதேசத்திலுள்ள சரசாலை சரஸ்வதி வித்தியாலயம் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் சாவகச்சேரி சக்தி அம்மன் ரி.எம்.எஸ் சாவகச்சேரி ஆர்.சி.ரி.எம்.எஸ் போக்கத்தை ஜி.ரி.எம்.எஸ் போக்கத்தை ஆர்.சி.ரி.எம், கெற்பெலி ஜி.ரி.எம்.எஸ் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப் பாடசாலை, இயற்றாலை எ.எம்.ரி.எம். பாடசாலை, கரம்பைக்குறிச்சி ஜி.ரி.எம்.எஸ் வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயம் குடமியன் ஜி.ரி.எம்.எஸ், வரணி வடக்கு ஜி.ரி.எம்.எஸ் தனங்கிளப்பு ஜி.ரி.எம்.எஸ் மீசாலை வீரசிங்கம் முன்பள்ளி கரம்பை எ.எம்.ரி.எம்.எஸ் ஆகிய பாடசாலைகள் புனரமைக்கப்படவுள்ளன.

## நயினாதீவு வீரபத்திரர் வீதியூடாக பஸ் சேவையை நடத்தக் கோரிக்கை

(நயினாதீவு)

நயினாதீவு வீரபத்திரர் வீதிப்பகுதில் உள்ள மக்கள் நயினாதீவு பிரதேச வைத்தியசாலைக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியிலிருந்து வைத்தியசாலை ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள நிலையில் இவ்வீதியூடான பேருந்து சேவை இடம்பெறுவதில்லை. இதனால் வீரபத்திரர் வீதிப்பகுதி மக்கள் தனியார் வாகனங்களில் பணத்தைச் செலவழித்து வைத்தியசாலைக்குச் செல்வதாகவும், இதனால் தாம் கஷ்ட நிலையை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

நயினாதீவுப் பிரதேசத்தில் ஒரு அரச பேருந்து சேவையில் ஈடுபடுவதாகவும், இச்சேவை குறித்த வீரபத்திரர் வீதியூடாக செல்வதாகவிருந்தால் தாம் கஷ்டமின்றி வைத்தியசாலைக்குச் செல்லமுடியும் எனத் தெரிவிக்கும் மக்கள் இது தொடர்பாக உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என பிரதேச மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (175)

# இழுவைப் படகு தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் இழுவைப்படகுத் தொழிலாளர்கள் கடந்த முதலாம் திகதி முதல் தமது இழுவைப்படகுத் தொழில் நடவடிக்கையை நிறுத்திக் கொண்டிருப்பதாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவிததார்.

மாவட்ட உள்ளூர் இழுவைப் படகுத் தொழிலாளர்கள் கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்னவைச், சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதனை அடுத்து இவ்வாறு கடந்த முதலாம் திகதி முதல் தாம் இழுவைப் படகுத் தொழில் நடவடிக்கையில் ஈடுபடப்போவதில்லை எனவும் தமக்கு மாற்றுத் தொழிலினை பெற்றுத்தருமாறு கடற்தொழில் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகின்றது.

இதனை அடுத்து உள்ளூர் இழுவைப்படகுத் தொழில் கடந்த முதலாம் திகதி முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

தற் சமயம் யாழ்.மாவட்டத்தில் குருநகர் மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதிகளில் உள்ள சில கடற்றொழிலாளர்கள் மட்டுமே இவ்வாறு இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி கடற் தொழிலில் ஈடுபட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இந்திய மீன்பிடி இழுவைப்படகுகளின் வருகையும் குறைந்திருப்பதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (பா)



இடம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் (ஐ.ஓ.எம்) பிரதிநிதிகள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை கொழும்பு பத்திரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இடம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தின் திட்டத் தலைவர் றிச்சட் டான்சிகர், திட்ட துணைத் தலைவர் யூசெப் லோபிறிட் ஆகியோர் கொண்ட குழுவினர் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதானமாக வீதி, விவசாயம், பாடசாலை, கிராமப்புற அபிவிருத்தி தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடினர். (படம். கே.நந்தகுமார்)

## விற்பனைச் சந்தை

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் 'திவிநெகும' சமுர்த்திப் புத்தாண்டுச் சந்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் கலந்து கௌள்ளவுள்ளார். (43)

# மேற்பார்வைக்குழு தெரிவு

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கான மேற்பார்வைக் குழுவிற்கு பின்வருவோர் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீரவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி வி.சிவராஜ் (25, கோணாவளை, கொக்குவில்), தேவராஜன் ரங்கன் (257, அரசடி வீதி கந்தர்மடம்), நடராஜா தமிழழகன் (மலைவாசை, உரும்பிராய் வடக்கு), சுந்தர் விஸ்வலிங்கம் கந்தவேல் (18,வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.)

அதேபோல் வவுனியா சிறைச்சாலைக்கான மேற்பார்வைக் குழுவிலும் பின்வருவோர் அடங்குவர். வண.அடம்ப கஸ்கட கல்யாண திஸ்ஸ (வவுனியா), வண. எம்.ஏ.ஜேசுராஜன் (அமைதி இல்லம் குட்செட் வீதி வவுனியா), மௌலவி டபிள்யூ.ஏ.தையிப் (வவுனியா முகைதீன் பள்ளி) (105)

# முரசின் இன்றைய பலன்

(05.04.2013 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் பங்குனி மாதம் 24 ஆம் திகதி.
நட்சத்திரம் அவிட்டம். முன்இரவு 09.03 வரை. திதி ஏகாதசி
மாலை 5.52 வரை. இராகுகாலம் 09.08 - 10.38 வரை.
சுபநேரம் 03.08 - 4.38 வரை. சித்தாமிர்தம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** சில நிகழ்வுகளால், மனவருத்தம் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினரின் ஆதரவால் நம்பிக்கை. தொழில், இலக்கு நிறைவேறும். முக்கிய செலவுக்கு, சிறு கடன். மாணவர்கள், வாகன கவனம். புது முயற்சிகள் தொடங்க அனுகூலம்.

**ரிஷபம்** மனதில் மகிழ்ச்சி நிறையும். இயலாதவர்களுக்கு உதவுவீர்கள். தொழில், செழித்து வளர துணைபலம் வரும். பணவரவில் முன்னேற்றம். எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை விலகும்.. கணவன் மனைவி அன்யோன்யம். விருந்துபசரிப்பு.

**மிதுனம்** நண்பர், உறவினர்களின் கருத்துக்களை ஏற்று செயல்படுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், கூடுதல் மூலதனம் செய்வீர்கள். வருமானத்தில் சாதனை. புத்திரர் விரும்பியதை வாங்கித் தருவீர்கள். பாராட்டு.

**கடகம்** உங்களுக்கு அனுசரணையும் உதவியும் அதிகம் வரும். திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வளர்ச்சியில் புதிய பரிமாணம். ஆதாய பணவரவில், வீட்டுப் பொருள் வாங்குவீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி வளரும்.

**சிம்மம்** நண்பரின் விமர்சனத்தால், மனவருத்தம் கொள்வீர்கள். பொறுமையுடன் செயல்படுவதால், நன்மை கிடைக்கும். தொழில், சராசரி. பணவரவு முக்கிய செலவுக்கு பயன்படும். உடல் நலம் பலம் பெறும். வெகுநாள் நினைத்த காரியத்தை தொடங்குதல் நலம்.

**கன்னி** சிலர் சுயலாபத்திற்காக, பணம் கடனாக கொடுக்க முன்வருவர். பெற வேண்டாம். தொழில், உள்ள அனுகூலத்தை பாதுகாப்பது நல்லது. சேமிப்பு, செலவுக்கு பயன்படும். போட்டியில் வெல்லும் எண்ணம். சூழ்நிலை தொந்தரவால், நித்திரை கெடலாம்.

**துலாம்** பொதுநல சிந்தனையுடன் செயல்படுவீர்கள். மாறுபட்டவர்களிடமும், மதிப்பு பெறுவீர்கள். தொழில், செழித்து, வாழ்வில் மறுமலர்ச்சியை உருவாக்கும். பணவரவு திருப்தி. இளமைக்கால நினைவுகளை பகிர்ந்து கொள்வீர்கள். பிள்ளைகளால் பெருமை.

**விருச்சிகம்** முன்பு அவமதித்து பேசியவர்களும், தவறுணர்ந்து அன்பு பாராட்டுவர். பெருந்தன்மை காட்டுவீர்கள். தொழில், வளர்ச்சிப்பணி திட்டமிட்டபடி நிறைவேறும். கூடுதல் பணவரவு. குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டம். பிள்ளைகள் பொறுப்புணர்வர்.

**தனுசு** உங்கள் சிரமங்களை, பிறரிடத்தில் சொல்லி ஆறுதல் தேடவேண்டாம். உங்கள் திறமை கண்டு பொறாமை கொள்வர். கவனம் தேவை. தொழில், முடியாத வேலைகளை முடிப்பீர்கள். வரவை விட, செலவு கூடும். இசை ரசிப்பதால் மனம் இலகுவாகும்.


**மகரம்** சார்ந்தவர்களின் கருத்துணர்ந்து, அபிப்பிராயம் சொல்வது நல்லது. தொழில் சீராக, சில சீர்திருத்தம் செய்வீர்கள். தனம் சேரும். தர்ம காரியங்களுக்குச் செலவிடுவீர்கள். விஷப்பிராணிகளிடம் விலகுக. தகுந்த ஓய்வு, புத்துணர்வு பெற உதவும்.

**கும்பம்** முக்கிய பணி நிறைவேற்றும் கட்டாய சூழ்நிலை வரலாம். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், சுமார். பகட்டுக்காக செலவு செய்ய வேண்டாம். வெளியூர் பயணத்திட்டத்தில் மாற்றம். எதிர்பார்த்த செய்தி தாமதம்.

**மீனம்** முக்கியமான விஷயத்தில் சுமுகதீர்வு பெறுவீர்கள். மனதில் உற்சாகம், நம்பிக்கை. தொழிலில், திட்டமிட்ட இலக்கை நிறைவேற்றுவீர்கள். பணவரவு திருப்தி. உத்தியோகத்தர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும். வெளியூரிலிருந்து நற்செய்தி.

# அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்ததில் முப்பது பேர் பலி பலர் படுகாயம்

## மும்பையில் துயர சம்பவம்



மும்பையில் கட்டுமானப் பணிகள் முடியாத நிலையில் கட்டப்பட்டு வந்த புதிய கட்டடம் இடிந்து விழுந்ததில் அதில் பணி செய்து கொண்டிருந்தவர்களில் 30 பேர் பலியாகியுள்ளனர்.

இன்னும் பலர் உயிருக்கு போராடிய நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். பலியானோரின் எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது. பல தொழிலாளர்கள் இன்னும் மீட்கப்படாமல் கட்டட இடிபாடுகளில் சிக்கியிருக்கின்றனர்.

மும்பை தானே ஷில்பாத்தா பகுதியில் 4 மாடிக் கட்டடம் கொண்ட இந்தப் பகுதியில் மேலும் கூடுதலாக 3 மாடிகள் கட்டும் பணி ஆரம்பமாகி நடந்து வந்தது. இந்நிலையில பாரம் தாங்காமல் இந்தக் கட்டடம் இடிந்து விழுந்தது. ஏற்கனவே இந்த 4 மாடியில் 30இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வந்தனர்.

திடீரென கட்டடம் இடிந்து விழுந்ததும், வீட்டில் இருந்தவர்கள் பலரும் சம்பவ இடத்திலேயே இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். 40இற்கும் மேற்பட்டோர் படுகாயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விதிமுறைக்கு எதிராக : இந்த கட்டடம் அனுமதி பெறாமல் கட்டப்பட்டு வந்ததாக தற்போது தான் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து கட்டட உரிமையாளர்கள் மீது பொலிஸார் கொலை வழக்கு பதிவு செய்துள்ளனர். இடிபாடுகளில் பலரும் சிக்கியிருப்பதால் இவர்களை மீட்கும் பணியில் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தியச் செய்திகள்

# கசந்தது தேனிலவு ஆரம்பமானது விமர்சனம்



மத்தியில் ஆளும் கூட்டணிக்கு ஆதரவு அளித்து வந்த தி.மு.க.வின் நிலை இதுவரை மிகவும் இணக்கமான முறையில் அமைந்திருந்தது. இனிவரும் நாள்களில் அவ்வாறு சும்மா இருக்கப் போவதில்லை. மத்திய அரசு மீதான எங்கள் அணுகுமுறையும் விமர்சனமும் இனி மிகக் கடுமையாக இருக்கும் என்று தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர். பாலு கூறினார்.

இலங்கைத் தமிழர் விவகார்த்தில் தமிழகத்தையும், தி.மு.க.வையும் மத்திய அரசு ஏமாற்றிவிட்டது. போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதையும், போர்க்குற்றங்களுக்கு காரணமானவர்களைத் தண்டிக்க சர்வதேச விசாரணை தேவை என்றும் தி.மு.க. வலியுறுத்தியது. போஸ்னியா, தெற்கு சூடான் போன்ற நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்டபோது, முந்திக் கொண்டு இந்தியா குரல் கொடுத்தது. ஆனால், பக்கத்து நாடான் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்து அலட்சியம் காட்டி வருகிறது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும், சிறைபிடிக்கப்பட்டும் வருகின்றனர். அதைத் தடுக்கவும் மத்திய அரசு நிரந்தர நடவடிக்கை எடுக்கவில்லை. இது போன்ற அலட்சியப் போக்குக்கு காங்கிரஸ் கட்சி பதில் கூறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்று பாலு கூறினார்.

# இந்தியாவின் கடனை அடைப்பது ஒவ்வொரு குடிமகனினதும் கடமை

## மோடி கூறுகிறார்

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முக்கிய பங்காற்றப் போகும் குஜராத் முதல் அமைச்சர் நரேந்திர மோடியை பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக்க நிறையப் பேர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், பாரதீய ஜனதாவின் நாடாளுமன்றக் குழுவில் சமீபத்தில் சேர்க்கப்பட்டுள்ள நரேந்திர மோடி, நேற்றுமுன்தினம் காந்தி நகரில் நடைபெற்ற ஒரு புத்தக வெளியீட்டு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

அப்போது இந்தியாவின் கடன் குறித்து நரேந்திர மோடி பேசியதாவது,

மோடி மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு குடிமகனும் இந்தியா வாங்கியுள்ள கடனுக்கு பொறுப்பாளி ஆகிறார்கள். அதற்கான, சந்தர்ப்பங்கள் வருகிறபோது, இந்தியாவிற்கான கடன்களை திருப்பி கொடுக்கவேண்டியது எமது கடமையாகும்.

நாடு, இன்று பொருளாதார பிரச்சினைகள் குறித்து விவாதத்தில் ஈடுபட்டுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற, புதிய தொழிற்போட்டிகள் தொடங்கியிருக்கின்றன. நாட்டில் முன்னேற்றத்தைக் கொண்டுவர அரசியல் விவாதங்கள் நடைபெறுகின்றன. அந்த வகையில், குஜராத்தும் நாட்டு முன்னேற்றத்திற்காக ஒரு நிகழ்ச்சி நிரலைக் கொண்டுவருவதில் பெருமை கொள்கிறது.

இதுநாள்வரை நாட்டின் பொருளாதார நிபுணர்களும், மேதைகளும் மட்டுமே இது குறித்து விவாதித்து வந்தனர். ஆனால், இன்று பல்கலைக் கழகங்களும், ஊடகங்களும், தொழிற் கூட்டமைப்புகளும் விவாதிக்கின்றன. இது வரவேற்கக்கூடிய ஒரு மாற்றமே. நாட்டில் உள்ள மாநிலங்களிடையே தொழிற்போட்டி ஏற்பட்டுள்ளது. நேர் மறையான இந்தப் போட்டியின் மாற்றத்தை நான் வரவேற்கிறேன்.

# தமிழக மீனவர்களை மீட்க சட்டநிபுணருடன் ஆலோசனை

இலங்கை சிறையில் உள்ள 19 தமிழக மீனவர்களை விரைவில் மீட்க சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. இந்த விவகாரத்தில் விரைவில் தீர்வு காணப்படும் என்று இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் தெரிவித்தார். இது குறித்து, டில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக டில்லியில் உள்ள இலங்கை தூதரிடம் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள் பேசினர். இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் இது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சு நடத்தினர்.

இந்த நிலையில், மீனவர்களின் நீதிமன்றக் காவல் 10 நாள்களுக்கு நீட்டிக்கப்பட்டது. இது குறித்து இலங்கைத் தரப்புடன் இந்திய அதிகாரிகள் பேசினர். தமிழக மீனவர்களுக்கு சட்ட உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். விரைவில் அவர்கள் நாடு திரும்புவர். இலங்கையில் இந்திய நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் வீட்டுவசதித் திட்டங்கள் திருப்தி அளிக்கும் வகையில் நடைபெற்று வருகின்றன. திட்டமிடப்பட்ட 50,000 வீடுகளில் முதல் கட்டமாக 1,000 வீடுகளை ஒப்பந்த நிறுவனங்கள் மூலம் மத்திய அரசே கட்டிக் கொடுத்தது. இரண்டாம் கட்டமாக 43,000 வீடுகளை பயனாளிகளே விருப்பத்துக்கு ஏற்றவாறு கட்டிக் கொள்ளும் வகையில் நிதியுதவி செய்யப்பட்டது.

அந்தத் திட்டத்தின்படி, வீடு கட்டத் தேவைப்படும் நிதியை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக மாற்றம் செய்யும் வசதியை இந்தியா உருவாக்கியுள்ளது. அந்த விபரங்கள் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரின் இணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் கூறினார்.

# கடவுளின் முகவரி என்ன? குழப்பமடைந்த மாணவர்கள்



சென்னை மாநகராட்சி பள்ளி 8ஆம் வகுப்பு மாணவர்களிடம், தனக்கு அறிவு, தைரியம் வேண்டிக் கடவுளுக்குக் கடிதம் எழுதும்படி பரீட்சையில் கேட்கப்பட்ட வினாவால், மாணவர்கள் குழப்பத்துக்கு ஆளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.

சென்னையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியில் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 3 ஆம் பருவத் தேர்வுகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற ஆங்கிலத் தேர்வில் கடிதம் எழுதுதல் பகுதியில், கடவுளுக்கு கடிதம் எழுதும்படி வினா இடம்பெற்றிருந்தது.

தனக்கு தைரியமும், அறிவும் வழங்கும்படி கோரிக்கை வைத்து கடவுளுக்கு கடிதம் எழுதும்படி 14ஆவது வினாவில் கூறப்பட்டிருந்தது. 3ஆவது பருவப் பாடப் புத்தகத்தில், கற்றல் குறைபாடு உள்ள மாணவர் ஒருவர் கடவுளுக்கு கடிதம் எழுதுவதைப் போன்று துணைப்பாடப் பிரிவில் ஒரு பாடம் இடம்பெற்றுள்ளது. அந்த பாடத்தை வழியொட்டி இந்த வினா கேட்கப்பட்டிருப்ப தாகக் கூறப்படுகிறது. இருப்பினும், தேர்வின் போது அனுப்புநர் இடத்தில் தனது முகவரியை எழுதிய பெரும்பாலான மாணவர்கள், பெறுநர் இடத்தில் கடவுளுக்கு எந்த முகவரியை எழுதுவது என்று தெரியாமல் குழப்பத்தில் ஆழ்ந்தனர்.

# இலங்கைத்தமிழர் கடத்தல் சகநாட்டு முஸ்லிம்கள் கைது



இலங்கையைச் சேர்ந்த பாக்கியராஜ் அவுஸ்ரேலியாவில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு ஆட்களைப் பணியமர்த்தும் தொழில் செய்கிறார். இவர் கடந்த மாதம் 10ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து சென்னைக்கு வந்தார். விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்தபோது அவர் மாயமானார். இந்நிலையில் மர்ம ஆசாமிகள் பாக்கியராஜின் மனைவிக்கு போன் செய்து அவரைத் தாங்கள் கடத்தியதாகவும், ரூ 3 கோடி கொடுத்தால் விடுவோம் என மிரட்டியுள்ளனர். இதுகுறித்து நுங்கம்பாக்கம் பொலிஸாரில் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு கடந்த மாதம் 13ஆம் திகதி விமான நிலைய பொலிஸாருக்கு மாற்றப்பட்டது.

தனிப்படை பொலிஸ்ாரும் தேடுதல் வேட்டை நடத்தி வந்தனர். சில தினங்களில் பாக்கியராஜ் சென்னை விமான நிலைய பொலிஸில் தஞ்சமடைந்தார். அப்போது, மர்ம ஆசாமிகள் தன்னை கடத்தியதாகவும், தன்னிடம் இருந்த பிரேஸ் லெட், தங்க வாட்ச் என சுமார் 30 சவரண் நகைகளை பறித்துக் கொண்டதாகவும் புகார் கொடுத்தார். தனிப்படை பொலிஸார் விசாரணையில், பாக்கியராஜை கடத்தியவர்கள் இலங்கையை சேர்ந்தவர்கள் என தெரியவந்தது. சென்னை புறநகர் பகுதியான கூடுவாஞ்சேரி, வளசரவாக்கம் மடிப்பாக்கம் ஆகிய பகுதிகளில் தங்யிருந்த இலங்கையை சேர்ந்த ஜெயின் மவுலானா (40), தாவான் கபீர் (37), முகமது ரம்ஜான் (23), முகமது பாஸ்லி (37) ஆகிய 4 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ....................................

முகவரி : ....................................

பிறந்த ஆண்டு : ....................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

## வவுனியாவில் இன்று மாகாண மட்ட கபடி

(வவுனியா)

வடமாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக் கான கபடிப்போட்டிகள் இன்றும் நாளை யும் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு, மன்னார் மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி. யாழ்ப்பாண மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

இரண்டாம் சுற்றில் இருந்து வவு னியா மாவட்ட அணி மோதவுள்ளது. பெண்கள் பிரிவில் மோதவுள்ள அணி களின் விபரம் வருமாறு:-

கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி. யாழ்ப் பாண மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி இரண்டாம் சுற்றில் வவுனியா அணி மோதவுள்ளது.

## அரை மரதன்

(கிளிநொச்சி)

வடமாகாண மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டிகள் இன்று காலை 6.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

பரந்தன் சந்தியில் இருந்து ஆரம்ப மாகும் அரை மரதன் ஓட்டப் போட்டி விசுவமடுவில் நிறைவடையவுள்ளது.

இப்போட்டியில் ஒவ்வொரு மாவட் டத்தில் இருந்தும் மாவட்ட மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெற்ற வீர, வீராங்கனைகள் கலந்து கொள்ள வுள்ளார்கள். மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற அரை மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் கலந்து கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தாண்டு இடம்பெற்ற அரை மர தன் ஓட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட வீர, வீராங்கனைகள் முதல் பத்து இடங்களில் அதிகமானவர்கள் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரியாலை வி.க.வின் மாபெரும் இறுதிப் போட்டிகள்



யாழ். பல்கலை அணி



யூனியன்ஸ் அணி


(நெல்லியடி)


அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டும், புதுவருட தினத்தை முன்னிட்டு அரி யாலை விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.30 மணி முதல் இரவு வரை அரி யாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் அணிக்கு 11 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் ஏ.சி.சி. அணியை எதிர்த்து காந்தி அணியும், அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் ஏ.சி.சி. அணியை எதிர்த்து கலைவாணி அணியும் மோதவுள்ளன. 11 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி 12 ஓவர்களைக் கொண்டதாகவும், 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் ஐந்து ஓவர்களைக் கொண்டதாகவும் நடைபெறவுள்ளது.


பெண்களுக்கான வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து யூனியன்ஸ் அணியும், கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து பாடுமீன் அணியும், கரப்பந்தாட்டப் போட்டித் தொடரின் உள்ளூர் இறுதிப் போட்டியில் சரஸ்வதி சிவப்பு அணியை எதிர்த்து சரஸ்வதி நீலம் அணியும், வடமாகாண மட்டப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து கலைமதி அணியும் மோதவுள்ளன. இவ் இறுதிப் போட்டி நிகழ்வுகளில் விளையாட்டு ஆர் வலர்கள், இரசிகர்கள் என அனைவரையும் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (12)





முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணிக்கும், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி அணிக்குமிடையில் நடைபெற்ற நண்பர்களின் சமர் என வர்ணிக்கப்படுகின்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இதில் இரு கல்லூரி அதிபர்களிடமிருந்து ஸ்ரான்லிக் கப்டன் கிண்ணத்தைப் பெற்றுக் கொள்வதையும், விருந்தினர்களுடன் ஸ்ரான்லிக் கல்லூரி அணி வீரர்கள் நிற்பதையும் காணலாம். இப்போட்டி நேற்று முன்தினம் வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (எஸ்.பி.)

## அதிக சகலதுறை வீரர்கள் வெற்றிக்கு வழி வகுக்கும்



(சென்னை)

அணியில் சகலதுறை வீரர்கள் அதிகம் இருப்பதால் இம்முறையும் வெற்றிகளைக் குவிப்போம் என சென்னை சூப்பர் கிங்ஸ் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஐ.பி.எல். போட்டி முற்றிலும் வேறுபட்டது. இதில் விளையாடவும் சிறப்பு கவனம் தேவைப்படுகிறது. எங்கள் வீரர்கள் தற்போது தீவிரமாக பயிற்சி செய்து வருகின்றனர். கடந்த தொடர் களை ஒப்பிடும் போது, அணியில் சிறந்த வீரர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதாகக் கூறுவது தவறானது. அதை நிரப்பும் வகையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. சகலதுறை வீரர்கள் அதிகம் உள்ளமை வெற்றிக்கு உறுதுணையாக இருக்கும். கடும் போட்டி இருந்தாலும் அரையிறுதிக்கு முன்னேறுவோம். அதுவே எமது முதல் இலக்கு எனவும் அவர் தெரிவித்தார்.

## செயலாளர் பதவிக்குத் தடை



(கொழும்பு)

இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளராக பதவிவகிக்கும் நிஷாந்த் ரணதுங்கவை மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்துவதை தவிர்க்குமாறு கல்கிசை மாவட்ட நீதிமன்ற நீதவான் பிரியந்த பெர்னாண்டோ உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த தடையுத்தரவு ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி வரை அமுலில் இருக்குமாறு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதிக்குள் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட நிறைவேற்றுக் குழுவின் 22 உறுப்பினர்கள் மீண்டும் அந்த பொறுப்புகளில் நியமிக்கப்படுவதற்கோ அது தொடர்பான வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கோ இயலாத வண்ணம் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் திலங்க சுமதிபால மேன்முறையீட்டு நீதிமன் றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவொன்றை பரி சீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் எஸ்.ஸ்கந்த ராஜா அது தொடர்பான தீர்ப்பு விரைவில் வெளிவரும் எனவும் தெரிவித்தார்.

### இன்றைய ஆட்டம்

Season 6

IPL

டில்லி டேர்டெவில்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ்

இடம்: பெரோஷா கோட்லா மைதானம்

மாலை 4.00 மணி

சென்னை சூப்பர் கிங்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ்

இடம் :சென்னை

இரவு : 8.00 மணி



## புதிய அவதாரம்

(வோஷிங்டன்)

ஊக்கமருந்து பயன்படுத்தியதை ஒப்புக் கொண்ட அமெரிக்க சைக்கிள் பந்தய ஜாம்பவான் லான்ஸ் ஆம்ஸ்ரொங்கிடம் இருந்து 7 உலக சம் பியன் பட்டங்கள் பறிக்கப்பட்டதுடன், அவருக்கு போட்டியில் பங்கேற்க ஆயுட்கால தடையும் விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், 41 வயதான ஆம்ஸ்ரொங் நீச்சல் பந்தய வீரராக மாறி வருகிறார். அமெரிக்கா வின் ஆஸ்டின் நகரில் இந்த வார இறுதியில் நடக்கும் மண்டல அளவிலான நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் அவர் தனது வயது பிரிவில் பங் கேற்க உள்ளார். மூத்த நீச்சல் வீரர்களை ஊக்கு விப்பதற்காக அவர் இந்தப் போட்டிக்கு அழைக் கப்பட்டதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரி வித்தனர்.


# குவான்டனாமோ கைதிகள் போராட்டம்!

அமெரிக்காவின் கொடும் சிறைச்சாலையான குவான்டனாமோவில் கடந்த 56 நாட்களாக நூற்றுக்கும் அதிகமான கைதிகள் உண்ணாவிரதப் போரட்டத்தை மேற்கொண்டுள்ளனர். சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட அப்பாவி முஸ்லிம்கள், குவான்டனாமோ சிறைச்சாலையில் இருந்து வெளியேற மரணம் ஒன்று தான் ஒரே வழி என்று நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

2001 இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து அமெரிக்கா ஆரம்பித்த "பயங்கரவாதி"களுக்கு எதிரான போரின் ஒரு பகுதியாக ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் ஆக்கிரமிப்புப் போர் தொடுத்தது. "பயங்கரவாதி"களுக்கு உதவும், "பயங்கரவாத" பயிற்சி பெறும், அல்லது கைது செய்யப்படும் "பயங்கரவாதிகள்" என பலரை விசாரிக்க கியூபா கடற்கரை எல்லையோரம் அமெரிக்காவிற்கு சொந்தமான குவான்டனாமோ எனும் இடத்தில் இரகசிய சிறைச்சாலை ஒன்றைக் கட்டியது புஷ் அரசாங்கம். இது அமெரிக்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட இடம் சுமார் 1.6 பில்லியன் டொலர் செலவு செய்து கட்டப்பட்டது; சி.ஐ.ஏ மற்றும் இராணுவத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சித்திரவதைக் கூடம்.

2004இல் குவான்டனாமோ சிறைச்சாலையில் நடக்கும் அநீதிகளைப் பல பத்திரிகைகள் ஆதரங்களுடன் வெளிச்சம் போட்டுக் காட்டின. சிறைச்சாலையில் உள்ள கைதிகளை நிர்வாணப்படுத்தி துன்புறுத்துவதும், மனிதத்தன்மையற்ற விதமாக அவர்களை அவமானப்படுத்துவதும், பாலியல் பலாத்காரம் செய்வதும், மிக மோசமான உணவு கொடுப்பதும் இயல்பாக நடப்பதை சுட்டிக் காட்டின. அதனால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

அமெரிக்க சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இயங்குவதாக சொல்லப்படும் இந்த சிறைக்கூடத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்கு அடிப்படை உரிமைகள் கூட வழங்கப்படுவதில்லை. விசாரணைக்கு அழைத்து வரப்படுபவர்கள் வழக்கறிஞரை சந்திக்கும் உரிமை தரப்படுவதில்லை. (பல போராட்டங்களுக்குப் பிறகு குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் வழக்கறிஞர்களைச் சந்திக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது). இந்த சிறைச்சாலைக்கு வெளிநாட்டு குடிமக்கள் கைதிகளாக கொண்டு வரப்படுகிறார்கள். பாதிக்கும் மேற்பட்ட கைதிகள் ஏமன் நாட்டைச் சேர்ந்தவர்கள், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், சூடான், சவுதி அரேபியாவை சேர்ந்தவர்களும் உண்டு. ஆனால் வெளிநாட்டுக் கைதிகளை சிறையில் அடைக்கும் போது பின்பற்ற வேண்டிய ஜெனிவா மனித உரிமைப் பரிந்துரைகளும் பின்பற்றப்படுவதில்லை. இதே அமெரிக்காதான் இலங்கைக்கு "எதிராக" "மனித உரிமை மீறல்கள்" குறித்து ஜெனிவாவில் தீர்மானம் கொண்டுவந்தது குறிப்பிடத்தக்கது.



ஜோர்ஜ் புஷ் போய் ஒபாமா வந்துவுடன், இந்த சிறைக் கூடம் மூடப்படும் என தெரிவிக்கப்பட்டது. "ஒபாமா இஸ்லாமியர்கள் மீது மதிப்பு கொண்டவர், தங்களை விடுவித்து விடுவார்" என அப்பாவியாக நம்பியிருந்தவர்களின் எதிர்பார்ப்பு மங்கத் தொடங்கியது. கடந்த வாரம் இந்த சிறைச்சாலையின் விரிவாக்கப் பணிகளுக்காக சுமார் 1 பில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறை மூடப்படும் என்ற நம்பிக்கை இத்துடன் துடைத்தெறியப்பட்டுள்ளது.

கைதிகளை வசைபாடுவது, அவர்களை மிரட்டுவது, அவர்களது பொருட்களை அழுக்காக்குவது, சேதப்படுத்துவது, மத நம்பிக்கை களை இழிவுபடுத்துவது, குரான் புத்தகங்களைக் கிழிப்பது, இஸ்லாமியர்களை பயங்கர வாதிகள் என பட்டம் சூட்டுவது என்று அமெரிக்க இராணுவ, உளவுத் துறை அதிகாரிகளின் அட்டூழியங்கள் தொடர்கின்றன.

இத்தனை கொடுமைகளையும் பொறுத்து வந்த கைதிகள் பெப்ரவரி 6 அன்று உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினார்கள். முதலில் 2 பேர் என்று தொடங்கிய உண்ணாவிரதம் மெல்ல பரவி 10, 20 என உயர்ந்து இன்று நூற்றுக்கும் அதிகமான கைதிகள் உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள். "எந்தவித குற்றமும் செய்யாமல் இங்கு வந்து சிக்கிவிட்டோம், இனி சட்டப்படி வெளியேறும் நம்பிக்கைகள் எங்களுக்கு இல்லை, இறந்து தான் இங்கிருந்து வெளியேற முடியும்" என உண்ணாவிரதத்தை தொடர்கிறார்கள்.

இதைப் பற்றி அமெரிக்க வெள்ளை மாளிகை மூச்சுவிடவில்லை. முதலில் "இங்கு எந்தவித உண்ணாவிரத போராட்டமும் நடக்கவில்லை" என்று மறுத்துவந்த குவான்டனாமோ சிறை நிர்வாகம் இத்தனை நாட்கள் கழித்து, உலகின் பல பத்திரிகை செய்திகளின் நிர்ப்பந்தத்தை தொடர்ந்து சில கைதிகள் மாத்திரம் உண்ணாவிரதம் செய்கிறார்கள் என தெரிவித்துள்ளது.


உண்ணாவிரதமாவது உலக மக்களின் கவனத்தை தங்கள் பக்கம் திருப்பும் என்ற நம்பிக்கையுடன் சிறைக்கைதிகள் போராடுகிறார்கள். ஏமனிலும், சவுதி அரேபியாவிலும், உலகெங்கிலும் உள்ள மனித உரிமை ஆர்வலர்களால் இந்த பிரச்சினை விவாதத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அழுகிக் கிடக்கும் அமெரிக்க மனித உரிமையும், அதன் அதிகார பாசிசமும் நம் முன் அம்பலப்பட்டு நிற்கிறது. அமெரிக்க மக்களும், உலக மக்களும் இதை பலமாக எதிர்ப்பதற்கேற்ப அந்த அப்பாவிகளை நாம் காப்பாற்ற முடியும்.

- நன்றி: வினவு -

# கூகுள் அலுவலகம்!

கம்ப்யூட்டர் உலகில் இருப்பவர்களுக்கு, கூகுள் இணையதளம் பற்றித் தெரியாமல் இருக்காது. அத்துடன், ஏற்கனவே உள்ள இணையதளங்களுக்கிடையே கடும் போட்டிகள் இருப்பதும் சகஜம். இது, தற்போது அதன் அலுவலக கட்டடங்களின் வடிவமைப்பிலும் எழத்





துவங்கியுள்ளது.

அப்பிள் நிறுவனம், தன்னுடைய மத்திய அலுவலகங்களின் கட்டடத்தை, வட்டமாக அமைத்துள்ளது. இதை விண்ணிலிருந்து பார்க்கும் போது, "விண் கப்பல்" போல் உள்ளது என, அப்பிள் முன்னாள் நிர்வாகி ஸ்டீவ் ஜொப்ஸ் கூறி பெருமைப்பட்டார்.

தற்போது கூகுள் கம்பெனி, கலிபோர்னியாவின் மவுன்டர் வியூவில், சிலிகன் கிராபிக்ஸ் நிறுவனத்தின் கட்டடத்தில் இயங்குகிறது. ஜுராசிக் பார்க்கில் வரும் டயனோசரை வடிவமைத்தது, இந்த சிலிகன் கிராபிக்ஸ் தான்!

இதனிடையே கூகுள், 1.1 மில்லியன் சதுர அடியில், புது கட்டடம் கட்டி வருகிறது. வெளியிலிருந்து பார்க்கும் போது, சாதாரணமாகத் தோன்றினாலும், உள்ளே புதுமைகளுக்கு பஞ்சமில்லை. வளைந்து, செவ்வகமாக, முக்கோணமாக, பல பாலங்கள், சுரங்கப்பாதைகள் என கட்டி வருகிறது.

ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவுக்குச் செல்ல, சைக்கிள் வசதி செய்யப்பட்டுள்ளது; இரண்டு நிமிடங்களுக்குள் போய் விடலாமாம். கூகுள் அலுவலகத்தில் காலை, மதியம், இரவு மூன்று வேளை சாப்பாடும் இலவசம். சாப்பாட்டு அறைக்குச் செல்ல, சறுக்குப் பாதை அமைக்கப்பட்டுள்ளது. மாநாட்டு மண்டபங்களை முட்டை வடிவத்தில் வடிவமைத்துள்ளனர். "பே வியூ" என்ற பெயர் கொண்ட இந்தப் புதிய கட்டடத்தை, 2015இற்குள் முழுமையாக முடிக்கத் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, பேஸ் புக் நிறுவனம், தன்னுடைய ஊழியர்கள் சிரமப்படாமல் இருப்பதற்காக, அலுவலகத்தினுள், ஒரு பிரதான வீதியையே உருவாக்கப் போகிறதாம். சபாஷ்... சரியான போட்டி!

# உங்களுக்குத் தெரியுமா?

- ❖ பூட்டான் நகரில் சினிமா தியேட்டர்களே கிடையாது.
- ❖ ஐஸ்லாந்தில் இரயில் போக்குவரத்து கிடையாது.
- ❖ அமெரிக்க சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்கு பணிஓய்வு கிடையாது.
- ❖ ஜப்பானியர்களுக்கு 3 என்ற எண் பிடிக்காது.
- ❖ திபெத்தியர்கள் தேநீரில் உப்பு கலந்து அருந்துவார்கள்.
- ❖ சீனர்கள் சைக்கிளை பறக்கும் புறா (Flying Pigeon) என்று அழைக்கின்றனர்.
- ❖ முதலை, திமிங்கலம் இரண்டுக்கும் நீருக்குள் சுவாசிக்க முடியாது.
- ❖ பெரும்பாலும் புலியும், சிங்கமும் ஒரே பகுதியில் வாழ்வதில்லை.
- ❖ ஆண் சிங்கத்திற்கு கம்பீரம் தரும் பிடரி மயிர் அதன் மூன்றாவது வ்யதில்தான் முளைக்கும்.
- ❖ பாலைவனத்தில் மிகக்குறைந்த ஒலியைக் கூடக் கேட்க முடியும்.
- ❖ பெரூலா என்ற தாவரம் வெளியிடும் பிசின்தான் பெருங்காயமாகும்.
- ❖ ஒவ்வொரு நிமிடத்துக்கும் 47. பைபிள்கள் விற்கப்படுகின்றன.

# கிண்டல் இசைக் கலைஞர்!

சிதார் இசைக் கலைஞர் ரவிசங்கர் பற்றிக் கேள்விப்பட்டு இருப்பீர்கள். அவரது சுயசரிதை நூலில், விமர்சகர் ஒருவர் பற்றி ரவிசங்கர் இப்படி குறிப்பிடுகிறார்:

'டில்லியிலிருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையின் சங்கீத விமர்சகர், எல்லாக் கலைஞர்களிடமும் குறை காண்பார். கச்சேரியின் போது சரியாக எந்த நேரத்தில் பாடகர் பிசகு செய்கிறார் என்று குறிப்பிட்டு எழுதுவது அவரது வழக்கம்.

ஒரு முறை அலி அக்பர்கான் சரோட்டுடன், நான் சிதார் இசைத்துக் கொண்டிருந்தேன். ஓரிடத்தில் தவறு செய்து விட்டேன். அடுத்த நாள் வழக்கம்போல் அந்த விமர்சகர், "இரவு 10:45இற்கு ரவிசங்கரின் விரல்கள் பிசகின..." என்று எழுதியிருந்தார்.

மறுபடியும் அலியும், நானும் இணைந்து கச்சேரி செய்தோம். இம்முறை அலி அக்பரின் விரல்கள் பிசகு செய்தன. உடனே வாசிப்பை நிறுத்தி, சிதாரைக் கீழே வைத்தேன். ஒலிபெருக்கியில் அறிவிப்புச் செய்தேன்... "நேரம் சரியாக 11 மணி, 20 நிமிடம், 20 விநாடி ஆகிறது. அலி அக்பர் இப்பொழுது மூன்று இடங்களில் பிசகியிருக்கிறார். குறிப்பிட்ட விமர்சகர் இதை குறித்துக் கொள்ளட்டும்..." என்றேன். சபையில் பலத்த சிரிப்பொலி. விமர்சகர் வெளிநடப்பு செய்து கொண்டிருந்தார்.


ரவிசங்கர் இசை மேதை மட்டுமல்ல; சரியான கிண்டல் பேர்வழியும் தான்' என்று தெரிகிறது.



6-(2)

# பத்தாண்டுகளின் பத்து இயக்குனர்கள்

சார்லஸ்



ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பேராசிரியரான ஜே.ஆர். ஆர்.ரொல்கின் 1937இல் தனது 45ஆவது வயதில் எழுத ஆரம்பித்து சுமார் 12 ஆண்டுகளாகக் கொஞ்சம் கொஞ்சமாக எழுதி முடித்த நீண்ட புனைகதை "லோர்ட் ஒப் த ரிங்ஸ்". அதில் பெரும்பான்மையான பகுதிகளை, இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து விமானப் படையில் பணியாற்றிய தனது மகன் படிப்பதற்கு, அஞ்சலில் அனுப்புவதற்காகவே அவர் எழுதினார். மொழி ஆய்வு, இலக்கியம், வரலாறு, புராணம் ஆகியவற்றில் அவருக்கிருந்த ஆழமான புலமையைப் புனைவில் பயன்படுத்திய காரணத்தாலேயே அந்த நூல் ஒரு [illegible]வதைக் கதை என்றல்லாமல் ஒரு புராண காவியமாகவே ஐரோப்பியர்களால் கொண்டாடப்படுகிறது.

பிற்காலத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட, "ஹாரி போட்டர்" உட்பட நூற்றுக்கணக்கான fantasy கதைகளிலும், star wars உட்பட ஏராளமான திரைப்படங்களிலும் ரொல்கின் பாதிப்பு இருக்கிறது என்பதிலிருந்தே அவரின் முக்கியத்துவத்தை உணரமுடியும். உலகப் போரின் மேல் ஆசிரியருக்கிருந்த ஆழமான வெறுப்பே புனைவாக [illegible]ந்திருக்கிறது என்றும், கதையில் வரும் அழிவுச் சக்தியான மோதிரம் உண்மையில் அணு ஆயுதத்தின் குறியீடு என்றும் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். நான் மூல நூலைப் படித்தது இல்லை, ஆனால் பீட்டர் ஜாக்ஸனின் மூன்று படங்களும் நூலின் அனுபவத்தைப் பன்மடங்கு பெருக்கியே திரையில் பிரதிபலித்திருக்கின்றன என்றே நம்புகிறேன்.

"மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துக்கு எதிரான கதை" என்று சுருக்கமாக "லோர்ட் ஒப் த ரிங்ஸ்"-ஐ சொல்லலாம். மூவுலகையும் ஆளும் சர்வ வல்லமையைத் தரக்கூடிய ஒரு மோதிரத்தை அழிப்பதற்காக, ஒரு குழு மேற்கொள்ளும் சாகஸப் பயணம்தான் மையச் சரடு. அத்தனை சக்தியைத் தரும் ஒன்றை வைத்து நல்லதும் செய்யலாமே என்ற கேள்வி இயல்பாக நமக்கு எழலாம். ஆனால், சர்வ வல்லமைகளும் ஒரு ஆளிடம் குவிந்தால், அவன் எப்பேர்ப்பட்ட தர்மசீலனாக இருந்தாலும், அது அவனைத் தீமையின் பக்கமே சாய்க்கும் என்று இந்தக் கதை சொல்கிறது. அந்த வகையில் குறியீட்டுத் தளத்தில் அது உலக அரசியலை, சர்வாதிகாரத்தை, வல்லரசுகளை விமர்சிக்கிறது.

அதேசமயம் "மனித பலவீனத்தின் கதை" என்றும் சொல்லலாம். தீமை எப்போதும் கவர்ச்சிகரமாகவும் ஈர்ப்பதாகவும் இருப்பதனால், மனித மனம் அதன் பக்கமே நழுவிச்செல்ல எத்தனிக்கிறது என்பதை அழுத்தமாகக் காட்டுவதன்மூலம், தனிமனித ஒழுக்கத்தைப் பற்றிய ஒரு நீதிக் கதையாகவும் "லோர்ட் ஒப் த ரிங்ஸ்" விளங்குகிறது. மனிதனின் பேராசையும், அதிகார வேட்கையும் எப்படிப்பட்ட அழிவுகளை ஏற்படுத்தும் என்பதையும், எந்த வகையான சர்வாதிகாரமும் கேடானதே என்பதையும், தீமை வெளியிலெல்லாம் இல்லை அது ஒவ்வொரு மனிதனுக்குள்ளுமே இருக்கிறது என்பதையும், ஏராளமான கதாபாத்திரங்கள், நிகழ்வுகள் மூலம் காட்டுகின்றன. மூன்று படங்களும். ஏராளமான துரத்தல்களும், சண்டைகளும், போர்களும் நிறைந்த பரபரப்பான சாகஸக் கதையாக இருந்தபோதிலும், அதன் மைய்க் கதாபாத்திரமான ப்ரோடோ சண்டையே போடுவதில்லை என்பதுதான் மிக விசித்திரமான அம்சம். அவன் போராடுவதெல்லாம் தன் மனத்தின் பலவீனத்தோடு மட்டும்தான். வல்லமை மிக்க அந்த மோதிரத்தை; மாவீரர்களாலும், மன்னர்களாலும் அறிஞர்களாலுமே எடுத்துச் சென்று அழிக்க முடியவில்லை. காரணம், மோதிரம் அவர்களுடைய பலவீனத்தைப் பயன்படுத்தித் தீமையின் பக்கம் விழவைத்துவிடும். கல்வி, செல்வம், வீரம் இவற்றில் அவர்கள் அதிகாரத்தைக் கைக்கொள்ளும் ஆசையில் தீமையின் பக்கம் விழுந்துவிடலாம். ஆகவே, அவை மூன்றுமே இல்லாத, கள்ளங்கபடமற்ற வெகுளியாகவும், இயல்பிலேயே நல்லவனாகவும் இருக்கும், குள்ளர் இனத்தைச் சேர்ந்த ப்ரோடோ எனும் இளைஞனிடம், மோதிரத்தை எடுத்துச்சென்று அழிக்கும் பொறுப்பு அளிக்கப்படுகிறது.



அந்த மோதிரத்தைக் கைப்பற்ற தீய சக்திகள் முயற்சிப்பதால், ப்ரோடோ இற்குத் துணையாக ஒரு மூதறிஞரும் பலவகைத் திறன்கள் மிக்க மாவீரர்களும் கொண்ட குழு ஒன்று புறப்படுகிறது. ப்ரோடோ தன் எதிரிகள் அளவுக்கே, தனக்குத் துணையாக வரும் குழுவினரைப் பார்த்தும் அஞ்ச வேண்டியிருக்கிறது. யார் மோதிரத்தின் மேல் ஆசை கொள்வார்கள் என்று தெரியாது. ஆகவே ஒரு கட்டத்தில் அவன் அவர்களை விட்டுப் பிரிந்து, தன் நெருங்கிய நண்பனோடு தனிப்பாதையில் பயணிக்கிறான், அவர்களை வேறு பாதையில் வரச்சொல்கிறான்.

பின்பு அவன் தன் மனத்தின் ஆசையோடும் போராட வேண்டியிருக்கிறது. தானே தனக்கு எதிரியாகிவிடும் அபாயம் ஏற்படுகிறது. தீமை அவனை உருக்க, மனதாலும் உடலாலும் பலவீனமானவனாக மாறுகிறான். உச்சக் காட்சியில் தீக்குழம்புக்குள் மோதிரத்தை அவனால் போடவே முடியவில்லை. வெறிபிடித்தவன் போல "இல்லை... இது என்னுடையது..." என்று சொல்லியபடி தன் விரலில் மோதிரத்தை அணியும் கட்டம் மிக அதிர்ச்சிகரமானது.

(தொடரும்)

நடிகர் ஸ்ரீகாந்த் எழுதுகிறார்:

# எனக்கு நாடகம் எழுத வராது!

ஆனந்த விகடனில் ஜெயகாந்தனின் "யாருக்காக அழுதான்?" நாவலைப் படித்த போது, கண்டிப்பாக இவரை சந்தித்தே தீர வேண்டுமென்று நான் முடிவெடுத்து விட்டேன்.

ஒரு நாள் மதியம் கவிஞர் வாலியுடனும் (அப்போது அவர் சினிமா கவிஞர் வாலி அல்ல - ஸ்ரீரங்கம் ரங்கராஜன்) மற்றும் பிற நண்பர்களான மேஜர் சுந்தரராஜன், மணவாளன் ஆகியோருடன் ஜெயகாந்தன் குடியிருந்த எழும்பூர் வீட்டிற்கு சென்றேன்.

ஆஜானுபாகுவாக, ஒரு பயில்வானைப் போன்று, தலை நிறைய சுருள் சுருளான முடியுடன் கதர் சட்டை, கதர் வேட்டியுடன், "யாரப்பா?" என்ற கேள்வியுடனும், ஒரு கம்பீர பார்வையுடனும் அவர் தரிசனம் தந்தார்.

"வாருங்கள், திண்ணையிலே உட்கார்ந்து பேசுவோம்..." என்றவாறு, தெரு வாசற்படிக்கு அருகே இருந்த அந்த ஒற்றையடிப் பாதை போன்ற திண்ணையில், அவரைப் பின்தொடர்ந்து போய் உட்கார்ந்தோம்.

"உங்களது, "யாருக்காக அழுதான்" கதை ரொம்ப நல்லாயிருக்கு. இதை நீங்கள் நாடகமாக்கி தர வேண்டும்..." என்று நான் சொல்லவும், நண்பர்கள் என்னைத் தொடர்ந்து கோரஸ் பாடினர்.

"காபி சாப்பிட்டுக் கொண்டே பேசலாமே..." எதில் சிறந்திருந்தாலும் என்றவாறு அவர் எழுந்து, எதிர் சாரியில் இருந்த் ஹொட்டலை நோக்கி நடக்க, நாங்களும் பின்தொடர்ந்து ஹோட்டலுக்குள் நுழைந்தோம்.

காபி சாப்பிட்டு முடித்து விட்டோம். எங்களை பார்த்து நட்புடன், "நீங்கள் இருக்கிற இடத்தை சொல்லுங்கள். நான் அங்கேயே வந்து நாடகமாக்கி, தருகிறேன். எனக்கென்னமோ, நாடகமெல்லாம் என்னால் எழுத சரிப்படாது என்று தான் தோன்றுகிறது..." என்றார்.

மறுநாள் நாங்கள் எதிர்பாராத வகையில், எங்கள் அறைக்கு வந்தார். எங்களுக்கு மகிழ்ச்சி தாள முடியவில்லை. பேப்பர் பேனாவைக் கொடுத்தோம்.


"உங்கள் சௌகர்யம் போல் இருந்து எழுதி விட்டு, போகும்போது பூட்டிவிட்டு போங்கள்..." என்று சாவியை அவரிடம் கொடுத்துவிட்டு, நாங்கள் எங்கள் அலுவலகத்திற்கு புறப்பட்டுப் போனோம். அக்காலத்தில், நாங்கள் முற்றிலும் தொழில் நடிகர்களாக மாறியிருக்கவில்லை.

தினமும் நாங்கள் மாலையில் வெகு ஆர்வத்துடன் அவர் எழுதியதை படிக்கலாம் என்று அறைக்கு திரும்புவோம். அறை பூட்டி இருக்கும். அறையின் மூலையில், 'கிழித்துப் போட்ட காகிதங்கள் பந்து போல் சுருட்டிப் போடப்பட்டு குவியலாய் இருக்கும்.

இவ்விதம் மூன்று நாட்கள் சென்றன. நான்காவது நாள் மாலை, நாங்கள் அறைக்கு திரும்பும் போது, அவரே அங்கு இருந்தார். எங்களுக்கு ஒரே குஷி... எழுதியிருப்பார் என்று.

எங்களைப் பார்த்ததும், ஒரு புன்முறுவலுடன் மீசையை நீவியவாறு, "எல்லாரும் இப்படி உட்காருங்கள்..." என்றார். நாங்கள் வட்டமாக கூடி அமர்ந்தோம். எங்கள் கண்கள் அறையைச் சுற்றி நோட்டமிட்டன. எங்களது, "ஸ்கிரிப்ட்" தென்படுகிறதா என்று!

அவர் சொன்னார்: "இத்தனை நாட்களாக நன்றாக காபி, டிபன் சாப்பிட்டேன். சாப்பாடும் சாப்பிட்டேன், தூங்கினேன். நல்ல, "ரெஸ்ட்டுப்பா!" ஏம்பா, உங்களுக்கு நெசமாலும் நாடகம் தேவைதானா? அதுவும் என் நாடகம் தேவைதானா? என் கதையை படிப்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் என் மீது காட்டும் அன்புக்கு மிக்க நன்றி. வரட்டுமா. என் மேல் வருத்தப் படாதீர்கள்..." என்று எழுந்து விட்டார்.



நாங்கள் ஒன்றும் பேசவில்லை. மௌனமாக வாசல் வரை வந்து அவரை வழியனுப்பி வைத்தோம்.




**சரியான விடை எழுதுபவர்களின் விபரங்கள் புகைப்படத்துடன் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளிவருகின்றது**

அதிக புள்ளிகளைப் பெற்ற திறமைசாலிகள் மூவருக்கு பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கான பரிசில்கள் விபரம் பத்திரிகையில் வெளியாகும். மூன்று மாத இறுதியில் தினமுரசு காரியாலயத்தில் வைத்து வழங்கிக் கௌரவிக்கப்படும்.

## புதிர்ப்போட்டி 37 இற்கான சரியான விடைகளை எழுதி பாராட்டுப்பெறுவோர்

**பெயர்:** கு.பிரியதர்சா
**பாடசாலை:** யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**பெயர்:** த.யுவந்தன்
**பாடசாலை:** கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**பெயர்:** சூ.விமலேசன்
**பாடசாலை:** யா/ ஹாட்லிக் கல்லூரி.

**பெயர்:** உ.டிலக்ஷனா
**பாடசாலை:** யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி.

**பெயர்:** ஸ்ரீ.சஞ்சுதன்
**பாடசாலை:** யா/ இந்துக் கல்லூரி.

**பெயர்:** சி.தயாளினி
**பாடசாலை:** யா/ அத்தியர் இந்துக் கல்லூரி.

**பெயர்:** மெ.இங்கிதை
**பாடசாலை:** யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை

**பெயர்:** த. இளங்கோ
**பாடசாலை:** கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

**பெயர்:** ய.தேவகீர்த்தனா
**பாடசாலை:** யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம்.

## 1 சிந்தனைக்கு விருந்து!

| | | | | |
|---|---|---|---|---|
| சி | லா | ர | ட | ஞ் |
| கு | ல | ம் | க | ச |
| தி | ண் | ற | ள | ப |
| சி | க | ம் | கை | கே |

1) ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று (....................)
2) இலங்கையில் தமிழ் விமர்சனத் துறைக்குப் பணியாற்றிய பெரியார் ஒருவர் (....................)
3) கையூட்டு என்ற பொருள் தரும் சொல்? (....................)
4) யானையை இவ்வாறு அழைப்பதுண்டு (....................)
5) பலவகை யாப்புகளால் ஆகிய ஒரு சிற்றிலக்கியம் (....................)

## 2 இந்தியா தொடர்பான முக்கியமானவை!

1) இந்தியாவின் தேசிய மரம் (....................)
2) செய்கோட்டை (....................)
3) M.G.R. நடித்த 100 ஆவது படம் (....................)
4) இயக்குநர் இமயம் (....................)
5) இயக்குநர் சிகரம் (................)

## 3 பொது அறிவுத் துணுக்குகள்!

1) மிக ஆழமான சமுத்திரம் எது?
2) அமெரிக்காக் கண்டத்தை கண்டு பிடித்தவர் யார்?
3) கண்டமாகவும், சமுத்திரமாகவும் உள்ளது எது?
4) உலகில் மிகச் சிறிய சமுத்திரம் எது?
5) குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் எது?

## புதிர்ப்போட்டி 37 இல் வெற்றியீட்டியோர்


**பெயர்:** த.மதுஷா
**பாடசாலை:** யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.


**பெயர்:** இ.பிரியதர்சினி
**பாடசாலை:** உடுவில் மகளிர் கல்லூரி.


**பெயர்:** கி.டிசாயினி
**பாடசாலை:** யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.


**பெயர்:** க.அபிராமி
**பாடசாலை:** யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை


**பெயர்:** கி.கயறூபி
**பாடசாலை:** யா/ சங்கானை சிவப்பிரகாச மகா.வித்தி

## புதிர்ப்போட்டி 37 இற்கான சரியான விடைகள்

**1**
1) 4
2) 3
3) 1
4) 2
5) 5

**2**
1) A - 33
B - 117
C - 173
2) R
ஒரு பக்கம் ஆங்கில எழுத்துக்கள் மறுபக்கம் எண்கள் இரண்டினதும் கூட்டுத்தொகை 20,
T (20) + 0 = 20
3) 11, 61 4) Y
5) A - 10 B - 62

புதிர்ப்போட்டி 39 இற்கான விடைகளை எதிர்வரும் ஏப்ரல் - 22 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல....
தினமுரசு
இல .373 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

**முக்கிய குறிப்பு**

தபால் மூலமும் அனுப்பலாம்,, காரியாலயத்திலுள்ள புதிர்ப்போட்டிப் பெட்டியிலும் போடலாம். யாழ் பிரதான பேருந்து நிலையத்தில் உள்ள தினமுரசு செய்திப் பெட்டியிலும் போடலாம்.

## விண்ணப்பதாரரின் விபரம்

மாணவர் முழுப்பெயர்:- ....................................
பாடசாலையின் பெயர் ....................................
தரம் :- :-....................................
தொலைபேசி இல.:-....................................
முகவரி :-....................................
....................................

# வெய்யிலின் உஷ்ணத்தை தவிர்க்க களைகட்டும் செவ்விளநீர் வியாபாரம்



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் வெய்யிலின் உஷ்ணத்தைத் தணிக்கும் செவ்விளநீர் வியாபாரம் களைகட்டியுள்ளது.

யாழ். நகரின் பல பகுதிகளிலும் இவ்வாறு தென்பகுதி,தம்புள்ள போன்ற இடங்களில் இருந்து வியாபாரிகளினால் எடுத்து வரப்பட்ட செவ்விளநீர், அத்துடன் உள்ளூர் செவ்விளநீர் இவ்வாறு விற்பனை செய்யப்படுகின்றன.

செவ்விளநீரின் அளவுகளுக்கேற்ப விலையும் வியாபாரிகளினால் சொல்லி விற்கப்படுகின்றது.

50 ரூபா, 60 ரூபா, 80 ரூபா என்று பல்வேறு விலைக்கும் செவ்விளநீர் நகரில் விற்பனை செய்யப்படுகின்றது. (பா)

# பெண்கள் பல்துறைகளில் முன்னேற யாழில் வழிவகுத்தது உடுவில் கல்லூரி

## சிக்கனக்கடனுதவி கூட்டுறவுச்சங்க சம்மேளனத்தலைவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் முதன் முதலில் உருவாக்கப்பட்ட பெண்கள் கல்லூரி உடுவில் மகளிர் கல்லூரியே அதன் பின்னர் பெண்கள் பல துறையில் கல்வி கற்று பலமுக்கிய பதவிகளில் இன்று உள்ளனர். என்று யாழ். மாவட்ட சிக்கனக்கடனுதவி சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ.வ. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற யாழ். மாவட்ட சிக்கனக்கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களின் சமாச மகளிர் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற மகளிர்தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


மகளிர் குழுத்தலைவி ஜெயமணிஜேஜ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் இன்று பெண்கள் உயர்பதவிகளில் இருக்கின்ற போதும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைத்தடுக்க முடியவில்லை. அதற்கு சட்டமும் இடம் கொடுக்கிறது. அதனால் சட்டத்தை இறுக்கமாக்கி நடைமுறைக்குக்கொண்டுவர வேண்டும் இதேபோல் சிறுவர் துஷ்பிரயோகமும் பெண்களுக்கெதிரான பாலியல் பலாத்காரமும் அதிகரித்தே செல்கின்றது இதற்கு போதைப்பொருள்பாவனை தான் காரணம் இந்தப் போதைப் பொருட்கள் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வந்து கொண்டிருக்கின்றது. எனவே, அவை தீமைகளை உண்டு பண்ணுகின்றன. அப்படித்தீமைகளை ஏற்படுத்தும் வருமானத்தை அரசாங்கம் எதிர்பார்க்கக்கூடாது என்றார் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திருமதி மதுமதிவசந்தகுமார் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார். மேலும், யாழ். மாவட்ட கூட்டுறவு சபையின் செயலாளர் திருமதி வேதவல்லி செல்வரத்தினம் யாழ். மாவட்ட சிக்கனக்கடனுதவி கூட்டுறவுச்சங்கங்களின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் பேச்சு, கவிதை, நடனம் போன்ற கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

(பா, இ)

# பேருந்துக் கட்டணத்தில் வேறுபாடு கவனமெடுக்குமா தனியார் "பஸ்" சங்கம்?


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கும், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்குமான பயணிகள் சேவைகளில் ஈடுபடும் தனியார் பஸ்களில் பயணிகளிடம் அறவிடப்படும் கட்டணத்தில் வேறுபாடுகள் காணப்படுவதுடன், மிகுதிப்பணமும் நடத்துநர்களால் வழங்கப்படுவதில்லையெனவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.




யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிசெல்லும் பயணிகளிடம் 96 ரூபா கட்டணம் அறவிடப்படுவதுடன் பயணிகள் 100 ரூபா கொடுத்தால், நடத்துநர்களால் மிகுதி நான்கு ரூபாவழங்கப்படுவதில்லை. அதேபோன்று, மூன்று, நான்கு பேராக பேருந்தில ஏறி பிரயாண கட்டணத்தைக் கொடுத்தாலும் நூறு ரூபாவே அறவிடப்படுகிறது. மிகுதிப் பணத்தைப் பெறுவதற்கு நடத்துநர்களுடன், பயணிகள் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுவதனையும் காண முடிகிறது.- அதேபோன்று கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் தனியார் பேருந்துகளில் கட்டணமாக 92 ரூபா அறவிடப்படுவதுடன் மிகுதிப் பணமும் வழங்கப்படுவதில்லை.


ஒரே வழிப்பாதையில் ஒரே இடத்திற்குச் செல்வதற்கு வெவ்வேறான கட்டண அறவீடு ஏன்




மாறுபடுகின்றது என பயணிகள் பலரும் தமக்குள் முணுமுணுப்பதனையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே, இதுவிடயத்தில் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதுடன், கட்டண வேறுபாட்டை நீக்கி, பயணிகளுக்கு மிகுதிப்பணத்தை வழங்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென பயணிகள் எதிர்பார்க்கின்றனர். (21)

# பரமர் சங்கமம்



'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பினம் எல்லாம் புதிசில் கொஞ்சம்தட்டுத் தடுமாறிக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது

ஒலிபரப்புச் சேவைகளில் அதுவும் தமிழில் வேறெங்கேயும் இல்லாத வளர்ச்சி நம்மவர்க் குண்டென்பது பொய்யான புகழ்ச்சி வார்த்தைகளில்லை.

இலங்கை வானொலி எண்டதும் அறிவிப்பாளர் மயில்வாகனம் நினைவுக்கு வருவதைத்தவிர்க்க முடியாது. அவரது மனைவி சிந்து மணி மயில்வாகனமும் அடங்குவார்.

அதனைத் தொடர்ந்து சில்வெஸ்டர் பாலசுப்பிரமணியம், எஸ். கே. பரராஜசிங்கம், இராஜகுரு சேனாதிபதி கனகரட்ணம், கே.எம்.ராஜா அனைவரும் அறிவிப்பாளர்களாக வலம்வந்தனர்.

அதேவேளை நடிகர்களாக சிறுவர் மலர், இளைஞர் மன்றம் ஆகியவற்றின் ஊடாக அறிவிப்பாளர்களான இராஜேஸ்வரி சண்முகம், வி. எச்.அப்துல்கமீத் ஆகியோரும் கொடி கட்டிப்பறந்தனர்.

இந்தக் காலத்தில் பல்வேறு ஒலிபரப்புகள் புற்றீசலாகத் தோன்றி அறிவிப்பாளர்களும் குப்பையாக மலிந்து போயுள்ளனர். பலாலி படைத்தளத்துள் இருந்து ஒலிபரப்பான இலங்கை ஒலிபரப்புக் கூட்டத்தாபன யாழ். சேவை, யாழ். எப்.எம்.என்னும் பெயரில் யாழ். வைமன் வீதியில் இருந்தொலிபரப்பாகிறது.

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளதால் நிகழ்ச்சிகளில் வளர்முக நிலையே காணப்படுகிறது. தேசிய சேவையில் ஒலிபரப்பப்பட்ட நாடாகங்கள் வாரத்தில் இரண்டு நாட்கள் ஒலிபரப்பப் படுகின்றன.

மறு ஒலிபரப்பாகும் அவை திரும்பத் திரும்ப இங்கேயும் மறு ஒலிபரப்பாவது தவிர்க்கப்படவேண்டும். தேசிய சேவையை வடபகுதியில் கேட்க முடியாமல் இருப்பதால் அந்நாடகங்களை யாழ். எப்.எம்.மில் ஒலிபரப்பப்படுவதும் விரும்பத் தகுந்ததுதான்.

செய்திகள் குடாநாட்டுப் பத்திரிகைகளில் உட்பக்கங்களில் வெளியாகும், நிகழ்வுகளில் விருந்தினர்களின் உரைகளே பிரதான செய்திகளாக இடம் பெற்றுவருகின்றன. அரச உத்தியோக பூர்வச் செய்திகள், அயல்நாட்டு , உலகச்செய்திகள் மருந்துக்கும் இடம்பெறுவதில்லை.

அனுபவம் வாய்ந்த ஒருவரே செய்தி ஆசிரியராகவும், செய்திகள் சேகரிப்பாளராகவும் நீடிப்பதால் இந்தக் குறைபாடுகள் நிகழ்கின்றன. எல்லாப் பிரதேசங்களுக்கும் செய்தியாளர்களை நியமித்து செய்திப் பிரிவை வளர்த்தெடுக்கவேண்டும்.

அறிவிப்பாளர்களில் பெண்களே அதிகமாக இருப்பதுபோல் தெரிகிறது. இரண்டு ஆண்களைத் தவிர பெண்களின் மூன்றுக்கும் அதிகமாக குரல்கள் ஒலிக்கின்றன.

அவர்களின் குரல்கள் ஒலிபரப்புக்கு ஏற்றதாகவும், இனிமையாகவும் இருப்பது வரவேற்கத்தக்கது. எனினும் உச்சரிப்பு முறைகளும், தொகுப்புரை செய்கையில் பொருந்தாத வார்த்தைகள் நுழைந்து விடுவதையும் பரவலாக அவதானிக்க முடிகிறது.

செய்தி வாசிக்கையில் ஐந்து, ஆறு இடங்களில் தடக்கி நிற்பதும் அவர்களின் அவசரப்பாய்ச்சல்களால் ஏற்படுவதும் சுட்டிக்காட்டத்தக்கன.

செல்வி சாளினி சாள்ஸ், என்.எஸ். தர்ஷா போன்றவர்கள் அவசரப்படாமல் விடயங்களை ஒப்புவித்தல் வேண்டப்படுகிறது. அவர்களின் குரல்கள் ஒலிபரப்புக்கு உகந்ததாக, இனிமையாக அமைந்துள்ளன.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம், என்பதை, சிறுகச் சிறுகப்பாயும் நீர் கல்லையும் உருக்கிப்பாயும் என்பதாக வளர்த்து கொள்ளலாமெல்லே என்ன நான் சொல்லுறே...

# மருதங்கேணி கோட்டமட்ட தமிழ்த்தினப்போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் மருதங்கேணி கோட்ட மட்ட பாடசாலைகளிடையிலான போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. விபரம் வருமாறு:

(நேற்றைய தொடர்)

பேச்சு பிரிவு 01

தனிஸ்லாஸ் அபிசர் (செம்பியன்பற்று றோ.க. த.க.பாடசாலை), தேவசுதன் ஜஸ்மியா (மணற்காடு றோ.க.த.க பாடசாலை)

பிரிவு 02

சிவனேசன் அபிசாயினி (ஆழியவளை சி.சி. த.க.பாடசாலை),றொக்சியா அகிலன் (கட்டைக்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 03

அகஸ்ரீன் டேனிசன் (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை),எட்வின் ஜெயராசா மேரி பவுஸ்ரினா (வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி)

பிரிவு 04

தங்கராசா பிருந்தா (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), அகஸ்ரீன் வோறின்சன் லெஸ்லி (மணற்காடு றோ.க.த.க. பாடசாலை)

பிரிவு 05

புஸ்பராசா திபாகர் (ஆழியவளை சி.சி.த.க. பாடசாலை), ம.சுஜானா (உடுத்துறை மகா வித்தியாலயம்)

திறந்த போட்டி

நாட்டார் பாடல்

(அம்பன் அ.மி.த.க. பாடசாலை), (செம்பின்பற்று அ.த.க. பாடசாலை)

இலக்கிய நாடகம்

(உடுத்துறை மகா வித்தியாலயம்)

வில்லுப்பாட்டு

(மணற்காடு றோ.க.த.க பாடசாலை)

விவாதம்

(உடுத்துறை மகா வித்தியாலயம்)

திறனாய்வுப்போட்டி பிரிவு 3

சபகரி சுரேஸ்வரன் (மெதடிஸ்த பெண்கள் உ.த.பாடசாலை), விஸ்வநாதன் றஜீபன் (வேலாயுதம் ம.வி),கெங்காதேவி கணேசலிங்கம் (தொண்டைமானாறு வீ.ம.வி)

பிரிவு 4

பிரியா நாகேந்திரன் (தொண்டைமானாறு வீ.ம.வி), ஜதீஸ் வினாயகமூர்த்தி (தும்பளை சிவப்பிரகாச ம.வி.) சரண்யா செல்வமனோகரன் (வல்வை மகளிர் ம.வி)

குறுநாடக ஆக்கம் பிரிவு 5

பிரியங்கா விக்னேஸ்வரன் (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), கணபதி அஜித்குமார் (வேலாயுதம் ம.வி), சுஜீதா செல்வராசா (தொண்டைமானாறு வீ.ம.வி) (தொடரும்) (109)

# சட்டம் சமமானதாக உள்ளதா?

# விசனமடைகிறார் அமைச்சர் ஹக்கீம்



(கொழும்பு)

இலங்கையில் அண்மைக் காலங்களில் நடைபெற்று வரும் சம்பவங்களைப் பார்க்கும் போது நாட்டில் சட்டம் பாரபட்சமின்றி பரிபாலிக்கப்படுகிறதா என்று எண்ணத் தோன்றுகிறது என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

அண்மையில் கொழும்பின் பிறநகர்ப் பகுதியான பெப்பிலியானவில் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான கடை ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ஹக்கீம் இவ்வாறு கூறினார்.


அந்தச் சம்பவத்தில் கைதான 14 பேரும், கடையின் உரிமையாளர் தமது புகாரைத் திரும்பப் பெற்றுக் கொண்டார் என்பதன் அடிப்படையில், நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளது விசனத்துக்குரியது என்பது மட்டுமல்லாமல் அதன் பின்னணியில் சந்தேகங்கள் இருக்கின்றன எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நீதியமைச்சருமான ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இப்படியான நடவடிக்கைகள் மக்களுக்கு சட்டத்தின் மீது இருக்கும் நம்பிக்கையைப் போக்க வழி செய்துவிடும் எனவும் அவர் கூறுகிறார்.

இலங்கையில் காவி உடை தரித்தால் எதையுமே செய்துவிடலாம் என்கிற ஒரு அசிங்கமான கலாசாரம் இருந்து வருகிறது எனவும் கூறும் அவர், அது கண்டிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

குற்றம் செய்தவர்கள் தப்பிப் பிழைத்துக் கொள்வதற்கான ஒரு இடமாக இலங்கை கணிக்கப்பட்டு சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணத்தை இழக்க வேண்டிய ஆபத்தும் வரலாம் எனவும் நாட்டின் நீதியமைச்சரான ரவூப் ஹக்கீம் கூறுகிறார்.

# போராட்டத்தில் மாணவர்கள்



(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தை மூடியமை உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுமுன்தினம் காலை பல்கலைக்கழக வளாகத்தில் ஒரு மணித்தியாலம் இடம்பெற்றது.

எதிர்வரும் 10ஆம் திகதி புதுவருட விடுமுறை வழங்கப்பட இருந்தபோதும் நேற்றுத் தொடக்கம் பல்கலைக்கழகத்தை மூட நிர்வாக அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளதாக மாணவர்கள் குறிப்பிடுகின்றனர். பிரச்சினைகள் காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழகம் தற்போது சிக்கல் நிலையை எதிர்கொண்டுள்ளதாக மாணவர்கள் கூறியுள்ளனர்.

# கைத்தொழில் அதிகாரசபை மாணவர்கள் இரண்டாவது தடவையாக இரத்ததானம்



(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகாரசபை மாணவர்கள் 20 பேர் நேற்று யாழ்.போதனாவைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.


கச்சேரியில் அமைந்துள்ள தேசிய விடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கட்டடத்தில் நேற்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற இந்த இரத்தான நிகழ்வில் யாழ்.போதனாவைத்தியசாலையின் இரத்தவங்கி வைத்தியரிடம் இவர்கள் இரத்ததானம் செய்து கொண்டனர். வருடத்தில் இரண்டுமுறை இவ்வாறு தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை மாணவர்கள் யாழ்.போதனாவைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்து வருகின்றனர். இம்முறை அவர்கள் முன்றாவது ஆண்டில் இரண்டாவது தடவையாக நேற்று இரத்ததானம் செய்து கொண்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

# பணியாளர்களை அனுப்ப தற்காலிகத்தடை

(கொழும்பு)

சைபிரஸ் நாட்டுக்கு இலங்கைப் பணியாளர்களை அனுப்புவது தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளது.

சைப்பிரஸில் காணப்படும் நிதி நெருக்கடி காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு அறிவித்துள்ளது.



# பாடசாலைகளின் பெறுபேறுகள் சில

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் வெளியான க.பொ.த. சா/த பெறுபேறுகளின் அடிப்படையில் சில பாடசாலைகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன அவை வருமாறு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பெறுபேறுகள்,

கி.சாய்ரூபன் 9 ஏ, க. மதனாகரன் 9 ஏ, சிறி. கார்த்திக் 9 ஏ, த.துவாரகா 8 ஏ, பி (ஆங்கில மொழிமூலம்), க.பூங்குன்றன் 8ஏ, சி, வி.சத்தியப்பிரியன் 8ஏ, சி, த.அனோசன் 8ஏ, எஸ், கி.அபிரா 8ஏ, எஸ், ச.விதுர்ஷா 8ஏ, எஸ், நே.ராஜமனோகரி 8ஏ, எஸ், ர.செந்தூரன் 7ஏ, 2பி, வி.விதுர்ஷா (ஆங்கில மொழி மூலம்),

த.தினேஸ் 7 ஏ, பி, சி, யோ.சஜந்தன் 7 ஏ, பி, சி, பி.ராம்கி 7ஏ, பி, சி, ச.சுதாகர் 7 ஏ. பி, சி, சி.சுஜீபன் 7 ஏ, பி, சி, ம.ஆரணி 6 ஏ, 2 பி, சி (ஆங்கில மொழி மூலம்), அலன்றொக்ஸி 6' ஏ, 2 பி, சி, சி.கோகுலன் 6 ஏ, 2 பி, சி,

தி.நிருசன் 6 ஏ, 2 பி, சி, பி.மயூரியா 6 ஏ, 2 பி, எஸ், (ஆங்கில மொழிமூலம்), நா.துஷானி 5 ஏ, 4 பி, பா.ஆதர்சன் 5 யு, 2 பி, 2 சி, சி.தனுசன் 5 ஏ, பி, 3 சி, அ.அஜித்தா 5 ஏ, பி, 3 சி.என பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,

சி.ராம்குமார் 8ஏ, சி, செ.கஜன் 7ஏ, பி, சி, அ.அமுதன் 6ஏ, பி, 2சி, சி.கேடில்ஸ் 5ஏ, பி, 3சி, ஜெ.குகந்தன் 4ஏ, 3பி, 2சி, க.கிருசாந்தன் 4ஏ, 3பி, சி, க.துஷ்யந்தன் 4ஏ, 3பி, 2சி, எஸ், கி.கிருசாந்தன் 4ஏ, 2பி, 3சி, த.சுபேசன் 4ஏ, 2பி, சி, எஸ், த.சரண்ராஜ் 4ஏ, பி, 4சி, ஜோ.பினேக்கால் 3ஏ, 5பி, சி,

தே.யுவகாந் 3ஏ, 3பி, 2சி, எஸ், பு.ரகுராமன் 3ஏ, 3பி, 2சி, எஸ், ச.பதுஜன் 3ஏ, 3பி, 2சி, க.நிமல் 3ஏ, 3பி, 3எஸ், ந.நிலஷன் 3ஏ, 2பி, 3சி, எஸ், அ.தனுராஜ் 3ஏ, 2பி, 3சி, எஸ், இ.தனுஸ்குமார் 3ஏ, பி, 3சி, 2எஸ், ஜெ.நிசாகரன் 3ஏ, பி, 2சி, 3எஸ்.

தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரி

கி.விஷ்ணுகா 9ஏ, ஜெ.மயூரன் 8ஏ, சி, ஆ.கிருஷா 8ஏ, சி, வா.விதுஷா 8ஏ, சி, லி.[illegible]ஜா 7ஏ, 2பி, ப.கௌதமன் 7ஏ, பி, சி, ஜெ.பரணிதா 7ஏ, பி, சி, சு.சஷானா 6ஏ, 2பி, சி, த.மதுரன் 6ஏ, 2பி, ஞா.டிலக்ஷன் 5ஏ, பி, 2சி, எஸ், லோ.ஷயிதா 5ஏ, பி, 2சி, எஸ், ம.லோஜினி 4ஏ, 3பி, 2சி, ச.அபிசயனி 4ஏ, 2பி, 2சி, ப.ஐஸ்வர்யா 4ஏ, 2பி, சி, உ.வினோதினி 3ஏ, 3பி, சி. இ.ஷண்ராஜ் 3ஏ, 3பி, 2சி, 2எஸ், ப.லக்ஷனா 3ஏ, 2பி, 2சி, 2எஸ், தி.மிதிலா 3ஏ, பி, 4சி, எஸ், ஆ.மதுரங்கன் 3ஏ, பி, 3சி, எஸ், ஷா.லக்ஜியா 3ஏ, 3சி, 2எஸ், தி.ரிஷிகேஷன் 2ஏ, 3பி, 3சி, ஸ்ரீ.கபிலன் 2ஏ, 3பி, 4சி, சோ.சோபிதன் 2ஏ, பி, 3சி, 2எஸ், ஆ.நவராஜி 2ஏ, 3பி, 4சி, ந.சிவரஞ்சினி 2ஏ, பி, 2சி, 3எஸ், ம.பியூட்டிக்கா 2ஏ, 3பி, 3சி, ஈ.நவிசா 2ஏ, 2பி, 4சி, எஸ், ப.மிதுஷா 2ஏ, பி, 3சி, 3எஸ், ஞா.கம்சினி 2ஏ, பி, சி, 4எஸ், பா.மேதினி 2ஏ, 3சி, 4எஸ்,

# பௌத்ததுறவிகளின் செயற்பாடு விசனமடையும் அமைச்சர் மகிந்த

இன்று வீதிக்கு இறங்கி பெரிதாகப் பேசுகின்ற, எதிர்ப்பு ஊர்வலம் நடாத்துகின்ற, மத வழிபாட்டுத் தலங்களுக்குள் தன்னிச்சையாக நுழைந்து தொலைக்காட்சிகளில் காட்சியளிப்பதற்காக ஓலமிடும் எங்களுடைய பௌத்த துறவிகள் போர் நிகழ்வுற்ற காலத்தில் எங்கே இருந்தார்கள்? அரந்தலாவில் பௌத்த பிக்குகள் 69 பேர் கொலை செய்யப்பட்ட போது எங்கிருந்தார்கள்? என்றாலும், இன்று முடிவில்லாமல் எதிர்ப்புப் பேரணி நடாத்துகிறார்கள், உரக்கக் கத்துகிறார்கள், ஏன்? அச்சமில்லை, அவற்றைச் செய்தால் விகாரைக்கு வரமுடியும் என்று அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். அவ்வாறின்றி இவர்களைப்போல் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சிகளிலும் பெயரைப் போட்டுக்கொள்ளத் துடிக்கின்ற கலகக்காரர்கள் வேறில்லை' என்று விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

'நாட்டை உயர்த்தும் நீல அலை' எனும் பெயரில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு புதிதாக அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் நிகழ்வு மாத்தறை, வெலிகம, மிதிகம பிரதேசங்களில் நடைபெற்றபோது, அவற்றில் கலந்துகொண்டே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துரைத்த அமைச்சர் குறிப்பிட்டதாவது,

'இன்று எங்கள் நாட்டுக்கு எதிராக எத்தனை எத்தனையோ உபாயங்கள் நடைபெறுகின்றன. இவற்றைச் செய்பவர்கள் நம்நாட்டவர்கள் அல்லர். பிறநாட்டவர்கள்தான் அவ்வாறு செய்கிறார்கள். என்றாலும், அவற்றுக்கு எமது நாட்டவர்கள்தான் ஒத்தாசை புரிகிறார்கள்.

# இளம்பெண்ணின் சங்கிலி அபகரிப்பு




வீதியால் நடந்து சென்ற இளம் பெண் ஒருவரின் சங்கிலி அபகரிக்கப்பட்ட சம்பவம் ஒன்று கைதடி பகுதியில் இடம்பெற்றுள்ளது சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று நண்பகல் 11மணிக்கு குறித்த இளம் பெண் வீதியால் சென்று கொண்டிருந்த வேளை இலக்கத்தகடுகளற்ற மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்களால் அப்பெண் அணிந்து சென்ற 1 1/2 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி இலாவகமாக அறுக்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப பெண் கூச்சலிடவே சாதுரியமாக மோட்டார் சைக்கிளில் ஓடி மறைந்தார். இந்த சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (21)

# கும்பாபிஷேகம்

சாவகச்சேரி கச்சாய் வீதி கோயில் குடியிருப்பு நடராஜ முருகமூர்த்தி ஆலய சிவன் அம்பாளுக்கு அமைக்கப்பட்ட புதிய ஆலய பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நாளை காலை 7மணிமுதல் 5மணிவரையுள்ள சுபவேளையில் பிரதமகுரு ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது. (43)



# க.பொ.த. (சாதாரணதர) மாதிரி வினாத்தாள்

## G.C.E. (O/L) Examination model Paper

**விஞ்ஞானமும், தொழில்நுட்பவியலும்**

ஆசிரியர் : S.T. ஜனார்த்தனன் (B.sc)

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) மின்குமிழில் நிரப்பப்படும் வாயு எது?
1) $H_2$ 2) Ar 3) $O_2$ 4) $CO_2$

2) இரசாயன சக்தி ஒளிச்சக்தியாக மாறும் சந்தர்ப்பத்தைத் தருவது?
1) சூரியக்கலங்கள் தொழிற்படுதல் 2) டைனமோக்கள் இயங்கல்
3) மின்சூள் ஒளிரல் 4) மின்மோட்டார் இயங்கல்

3) குருதியில் வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் அசாதாரணமாக அதிகரிப்பதால் ஏற்படும் விளைவு?
1) குருதிச்சோகை 2) ஈமோபீலியா
3) உயர் குருதியமுக்கம் 4) லியூக்கேமியா

4) உணவுக் கால்வாய்ப்பகுதியில் அகத்துறிஞ்சப்படும் குருதியை எடுத்துச் செல்லும் குருதிக்கலன் எது?
1) ஈரல் நாளம் 2) ஈரல் நாடி
3) ஈரல்வாயி நாளம் 4) பிற்பெருநாளம்

5) ஒளித்தொகுப்பின் பிரதான விளைபொருளாக அமைவது
1) குளுக்கோசு 2) மாப்பொருள்
3) ஒட்சிசன் 4) சக்தி

6) இலைகளில் மாப்பொருள் பரிசோதனையின்போது அற்ககோலில் வெப்பமாக்கப்படுவதற்கான காரணம்
1) கலங்களை இறக்கச்செய்ய 2) பச்சையத்தை அகற்ற
3) அற்ககோலை அகற்ற 4) மாப்பொருளை இனங்கான


7) வன்கூட்டுத்தசை பற்றிய கூற்றுக்களில் தவறானது
1) கிளைகளைக் கொண்டவை
2) வரிகள் கொண்டவை
3) ஒரு கலத்தில் பல கருக்கள் காணப்படும்
4) இச்சை வழி இயங்கும்.

8) சாற்றேற்றம் என்பதால் குறிப்பிடப்படுவது
1) இலைகளிலிருந்து குளுக்கோசு காழின்மூலம் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படல்.
2) இலைகளிலிருந்து குளுக்கோசு உரியத்தின் மூலம் ஏனைய பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்படல்.
3) வேரிலிருந்து நீரும் கனியுப்புக்களும் காழினூடாக மேல்நோக்கிக் கடத்தப்படல்.
4) வேரிலிருந்து நீரும், கனியுப்புக்களும் காழினூடாக மேல்நோக்கிக் கடத்தப்படல்.

9) ஆவியுயிர்ப்பு வீதத்தைக் குறைக்கும் சந்தர்ப்பம் எது?
1) சூரிய ஒளி அதிகரித்தல் 2) காற்றின் வேகம் கூடுதல்
3) வளியின் ஈரப்பதன் கூடுதல் 4) வளியமுக்கம் குறைதல்

10) 10 kg திணிவுள்ள கல்லொன்றை பாதையில் கண்ட மாணவன் 5 N விசையை பிரயோகித்து 2 m நகர்த்தி பாதையோரத்தில் விட்டான். மாணவனால் செய்யப்பட்ட வேலை
1) 10 x 2 J 2) 5 X 2 J
3) 10 x 5 J 4) (10 + 5) 2 J

11) கீழே தரப்பட்ட படங்களில் மின்குமிழ் எதில் ஒளிரும்.



சீனிக்கரைசல் — உப்புக்கரைசல் — குளுக்கோசுக் கரைசல் — தூயநீர்


12) செவிப்பறையால் பெறப்பட்ட அதிர்வுகளை வரியலாக்கி உட்செவிக்குக் கடத்துவது
1) ஊத்தேக்கியாவின் குழாய் 2) செவிச்சிற்றென்புகள்
3) நத்தைச்சுருள் 4) தலைவாயில் உபகரணம்

13) இதயத்துடிப்பை ஆளும் மையநரம்புத் தொகுதியின் பகுதி எது?
1) மூளையம் 2) மூளி
3) நீர்வளைய மையவிழையம் 4) முண்ணான்

14) ஈர்க்கப்பட்ட இழையொன்றின் மீடிறனை அதிகரிக்க பின்வருவன வற்றில் எதனை மேற்கொள்வீர்?
1) இழையின் நீளத்தைக் கூட்டல்
2) இழையின் இழுவிசையைக் கூட்டல்
3) இழையின் தடிப்பைக் கூட்டல்
4) இழையின் எண்ணிக்கையைக் கூட்டல்


15) வளியில் ஒலியின் வேகம் 330 $ms^{-1}$ எனின், 20 cm நீளமுடைய அலையின் மீடிறன் யாது?
1) $\frac{330}{20}$ Hz 2) $\frac{20}{330}$ Hz
3) $\frac{330 \times 100}{20}$ Hz 4) $\frac{330}{20 \times 100}$ Hz

16)



சுற்றில் ஒரு மின்கலம் 1.5 V ஆகவும் A மானி வாசிப்பு 0.5 A ஆகவும் காணப்பட்டது. மின்குமிழின் தடை யாது?
1) $\frac{1.5}{0.5}$ Ω 2) $\frac{0.5}{1.5}$ Ω 3) $\frac{3}{0.5}$ Ω 4) $\frac{0.5}{3}$ Ω

17)




ஓமின் விதியை வாய்ப்புப் பார்க்க மாணவன் ஒருவனால் ஒழுங்கமைக்கப்பட்ட மின்சுற்றைப் படம் காட்டுகிறது. இங்கு X,Y,Z என்பவற்றை முறையே குறிப்பவை.
1) மின்குமிழ், அம்பியர்மானி, வோல்ற்மானி
2) வோல்ற்மானி, மின்குமிழ், அம்பியர்மானி
3) அம்பியர்மானி, வோல்ற்மானி, மின்குமிழ்
4) அம்பியர்மானி, மின்குமிழ், வோல்ற்மானி

18) கம்பியொன்றின் தடை தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?
1) கம்பியின் நீளம் கூட, தடை கூடும்
2) கம்பியின் கு.வெ. கூட, தடை கூடும்.
3) கம்பியின் வெப்பநிலை கூட, தடை குறையும்.
4) கம்பி ஆக்கப்பட்ட பதார்த்தத்தின் தன்மைக்கு ஏற்ப தடை மாறாது.

19) மின்சுருள் ஒன்றினூடாக 5 A மின்னோட்டம் 2 நிமிடங்களுக்கு பாய்ந்தபோது 7200 J வெப்பம் விடுவிக்கப்பட்டது. சுருளுக்கு வழங்கப்பட்ட மின்னழுத்த வித்தியாசம் யாது?
1) $\frac{7200}{5 \times 2}$ V 2) $\frac{7200}{5 \times 2 \times 60}$ V
3) $\frac{7200 \times 60}{5 \times 2}$ V 4) $\frac{5 \times 2 \times 60}{7200}$ V

20)




$CuSO_4$ கரைசல்


X,Y காபன் கோல்கள் தரப்பட்ட அமைப்பை அவதானித்த மாணவர் கூறிய அவதானங்கள் பின்வருமாறு
A - Y இல் செங்கபிலப் படிவு ஏற்பட்டது.
B - கரைசலின் நீலநிறம் படிப்படியாக குறைந்தது.
C - X இல் வாயுக் குமிழிகள் தோன்றின
இவற்றுள் சரியானது எது?
1) A,B 2) A,C 3) B,C 4) A,B,C

21) கபச்சுரப்பியால் சுரக்கப்படும் ADH இனால் ஆளப்படும் செயற்பாடு
1) உடல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல்
2) உடலில் நீர்ச்சமநிலையைப் பேணல்
3) ஆபத்தான சந்தர்ப்பங்களில் உடற் செயற்பாடுகளுக்கு காரணமாக அமைதல்
4) குருதியின் வெல்ல மட்டத்தைப் பேணல்.

22) கீழே படத்தில் காட்டப்பட்டவாறு அமைப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு சூரிய ஒளியில் வைக்கப்பட்டன. முதலில் கூடிய வாசிப்பைக் காட்டும் வெப்பமானியைக் கொண்ட அமைப்பு எது?




23)




தரப்பட்ட அமைப்புத் தொடர்பான கூற்றுக்களில் சரியானது எது?

1) காந்தவிசைக்கோடு N→S, மின்னோட்டம் X→Y, இயக்கம் கீழ்நோக்கி
2) காந்தவிசைக்கோடு N→S, மின்னோட்டம் X→Y, இயக்கம் கீழ்நோக்கி
3) காந்தவிசைக்கோடு S→N, மின்னோட்டம் Y→X, இயக்கம் கீழ்நோக்கி
4) காந்தவிசைக்கோடு S→N, மின்னோட்டம் Y→X, இயக்கம் கீழ்நோக்கி

24) போசலின் பாண்டம் தயாரிப்பில் பயன்படுவது,
1) தொலமைற்று, பெல்ஸ்பார் 2) படிகம், தொலமைற்று
3) சிலிக்கா, மைக்கா 4) படிகம், பந்துக்களி

25) ஒருவரது கண்ணைச் சோதித்துப் பார்த்த கண் வைத்தியரால் வழங்கப்பட்ட மருந்துவச் சிட்டையில் காணப்பட்டது பின்வருமாறு,

| R | L |
|---|---|
| +2.5 | +2.5 |

இக் குறிப்புப்படி அவர் அணியவேண்டிய வில்லைவகையும் அதன் குவியத்தூரமும் முறையே,
1) குவிவுவில்லை 40 cm குவியத்தூரம்
2) குழிவுவில்லை 50 cm குவியத்தூரம்
3) குவிவுவில்லை 2.5 m குவியத்தூரம்
4) குழிவுவில்லை 2.5 m குவியத்தூரம்

26) எப்போதும் உருச்சிறுத்த நிமிர்ந்த விம்பத்தை தருபவை தொடர்பான A,B,C, D ஆகிய நான்கு மாணவரின் கூற்று.
A- குவிவுவில்லை B - குவிவு ஆடி
C - குழிவு வில்லை D - குழிவு ஆடி
மேற்படி 4 மாணவரின் கூற்றுக்களில் சரியானது.
1) A யும் D யும் 2) C யும் D யும்
3) C யும் B யும் 4) A யும் B யும்

27) இரும்பின் தாதுப்பொருட்களை பயன்படுத்தி இரும்பு பிரித்தெடுத்தல் தொடர்பான 4 மாணவரின் கூற்றுக்கள் பின்வருமாறு
மாணவன் A - இங்கு தாழ்த்தல் செயல்முறை பயன்படுகிறது. தாழ்த்தும் கருவியாக கற்கரி பயன்படும்.
மாணவன் B - இங்கு தாழ்த்தல் செயல்முறை பயன்படும். தாழ்த்தும் கருவியாக காபனீரொட்சைட்டு பயன்படுகிறது.
மாணவன் C - இங்கு தாழ்த்தல் செயல்முறை பயன்படும். தாழ்த்தும் கருவியாக சுண்ணக்கல் பயன்படுகிறது.
மாணவன் D - இங்கு தாழ்த்தல் செயன்முறை பயன்படும் தாழ்த்தும் கருவியாக காபனீரொட்சைட்டு பயன்படுகிறது.
மேற்படி மாணவரின் கூற்றுக்கள் தொடர்பாக சரியானது
1) A யின் கூற்று 2) B யின் கூற்று
3) C யின் கூற்று 4) D யின் கூற்று

28) பின்வருவனவற்றுள் பெற்றோலிய விளைபொருளில் இருந்து உற்பத்தி செய்யப்படாதது.
1) ரெஜிபோம் 2) நைலோன்
3) குளோரோபோம் 4) ரெறிலீன்


29) $Pb(NO_3)_2$ எனும் சேர்வையிலுள்ள நைதரசனின் சதவீதம்

Pb = 207, O =16, N - 14
1) $\frac{28}{331} \times 100$ 2) $\frac{28}{100} \times 331$
3) $\frac{28}{251} \times 100$ 4) $\frac{251 \times 28}{100}$

30) ஈருலோகச் சட்டத்தை கொண்டிராதது,
1) மின்கனலி 2) சோறு அவிப்பான்
3) மின் அழுத்தி 4) அமிழ்ப்பு வெப்பமாக்கி

31) தன்மகரந்த சேர்க்கையை தடுப்பதற்கான இசைவாக்கங்களும் அதனைக் கொண்டுள்ள தாவரங்களும் பின்வருமாறு, இவற்றுள் பொருத்தமானது.
1) நாகலிங்கப்பூ - பூசணி
2) சமனில் தம்ப உண்மை - மல்லிகை
3) ஆணகமுள் முதிர்வு - இந்திரபுஷ்பம்
4) ஈரில்லம் - பப்பாசி

32) ஒளிகாலும் இருவாயில்கள் இரண்டு கொண்டு 4 மாணவர் ஏற்படுத்திய மின்சுற்றுக்கள் பின்வருமாறு, இவற்றுள் எதில் ஒளிர்வு அவதானிக்கப்படும்




33) வானொலி, தொலைக்காட்சி என்பன தொடர்பாடல் ஊடகங்கள் ஆகும். இங்கு பயன்படும் மின்காந்த அலைகளின் மீடிறன் வீச்சு
1) $10^{11} - 10^{14}$ Hz 2) $10^{5} - 10^{15}$ Hz
3) $10^{3} - 10^{5}$ Hz 4) $10^{5} - 10^{10}$ Hz

34) மின்வழங்கலுக்காக பயன்படும் உலோகம் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டிய இயல்பு
1) வளியில் அரிப்புக்கு உட்படாது இருத்தல்
2) கடத்தாறு குறைவாக இருத்தல்.
3) தடைத்திறன் கூடவாக இருத்தல்.
4) இலேசானதாக இருத்தல்.

35) கொள்ளளவி ஒன்றில் பயன்படும் மின்னிழையப் பதார்த்தம் அல்லாதது.
1) ஈயத்தாள் 2) கடதாசி தாள்
3) பொலித்தீன் தாள் 4) வளி


36) பின்வரும் எவ் நுண்ணங்கியின் தொழிற்பாடு காரணமாக மண்ணில் நைத்திரேற்று உப்புக்களின் செறிவு குறைக்கப்படுகிறது.
1) நைதரசன் பதிக்கும் பற்றீரியாக்கள் மூலம்.
2) நைத்திரைற்று ஆக்கும் பற்றீரியாக்கள் மூலம்.
3) நைதரசன் இறக்கும் பற்றீரியாக்கள் மூலம்.
4) நைத்திரேற்று ஆக்கும் பற்றீரியாக்கள் மூலம்.

37) P, Q, R,S ஆகிய 4 மூலகங்கள் கொண்டு நடாத்தப்பட்ட செயற்பாடுகளின் பெறுபேறுகள் பின்வருமாறு

| உலோகம் | குளிர் நீருடன் தாக்கம் | ஐதான அமிலத்துடன் | நீராவியுடன் தாக்கம் |
|---|---|---|---|
| P | தாக்கமில்லை | தாக்கம் நிகழ்கிறது | தாக்கமில்லை |
| Q | தாக்கம் நிகழ்கிறது | தாக்கம் நிகழ்கிறது | தாக்கம் நிகழ்கிறது |
| R | தாக்கமில்லை | தாக்கமில்லை | தாக்கமில்லை |
| S | தாக்கமில்லை | தாக்கம் நிகழ்கிறது | தாக்கம் நிகழ்கிறது |

தரப்பட்டனகொண்டு தாக்குதிறன் ஏறுவரிசையில் குறித்த மூலகங்களை ஒழுங்குபடுத்தின் பெறப்படும் தொடர்
1) P, Q, R, S 2) R, P, S, Q
3) Q, S, P, R 4) P, S, R, Q

38) மேலே வினா 37 இன் மூலம் Q அமிலத்துடன் அடையும் தாக்கத்தின் தாக்கவீதத்தை அதிகரிக்க மேற்கொள்ள முடியாதது.
1) அமிலத்தின் செறிவைக் கூட்டல்
2) தாக்கு கலவையினை வெப்பமேற்றல்
3) தாக்கத்தில் பயன்படும் மூலகம் Q வை தூளாக்கி தாக்கமுறவிடல்
4) தாக்கத்தை குளிரூட்டியில் வைத்து நடாத்துதல்.

39)




AB எனும் பலகைத்துண்டை சாய்தளமாகப் பயன்படுத்தி 120 N சுமையினை B வரை எடுத்துச் செல்வதை படம் காட்டுகிறது. இங்கு பொறியின் வேக விகிதமாக அமைவது.

1) $\frac{120}{30}$ 2) $\frac{30}{120}$
3) $\frac{0.4}{2}$ 4) $\frac{2}{0.4}$

40) "கல்லூரிகளில் சுற்றுச்சூழல் படையணியை உருவாக்கி நலன் பேணுவீராக" இது பாடசாலை வாசலில் காணப்பட்ட வாசகம் ஆகும். இது தொடர்பாக சரியான கூற்று.
1) கல்லூரிகள் தோறும் சுற்றுப்புற சூழல் படையணி அமைப்பில் மாணவன் நலன் பேணப்படும்.
2) பாடசாலைகளில் சுற்றுப்புறச் சூழல் படையணி அமைக்கவேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
3) மாணவர்கள் குழுக்களாக தொழிற்பட்டு சூழலை பேணின் மாணவரின் உள உடல் நலன் பேணப்படும்.
4) சுற்றுச்சூழலைப்பேண மாணவர் படையணி அமைப்பது அத்தியாவசியமாகும்.

## பகுதி II

01) மின்சூழ் விளக்கு ஒன்றின் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. இதில் மின்கலங்களோ, மின் குமிழ்களோ பயன்படுத்தப்படவில்லை. மின்சூளை கிடையாகப் பிடித்துக்கொண்டு மெதுவாக 15 - 30 Sec இற்கு முன் பின்னாக அசைத்தால் 5 நிமிடம் மின்சூழிலுள்ள LED தொடர்ந்து ஒளிர்வதற்குத் தேவையான மின்சக்தி உருவாக்கப்படுகின்றது.




1) a) இங்கு மின்சக்தி உருவாக்கப்படுவதற்கு அடிப்படையான விதி எது?
b) அவ்விதியை எழுதுக.
2) LED மின்சக்தியை எவ்வாறு பெறுகின்றதென விளக்குக.
3) a) X எனப்படும் அமைப்பு யாது?
b) அமைப்பு X பயன்படும் சந்தர்ப்பம் யாது?
4) a) LED யின் குறியீட்டை வரைக.
b) LED யின் தொழிற்பாட்டை விபரிக்க.
5) இம்மின்சூழின் தொழிற்பாட்டின் தத்துவத்தின் அடிப்படையில் தொழிற்படும் அமைப்பு யாது?

13ஆவது வீரர்களின் போர் நேற்று ஆரம்பம்

# பிரசாத், கஜந்தன், ஜெனந்தன் சிறப்பான செயற்பாடு

# மகாஜனாக் கல்லூரி முன்னிலை

(சுன்னாகம்)

பிரசாத், கஜந்தன், ஜெனந்தன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி முன்னிலை பெற்றுள்ளது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும் இடையில் கடந்த 2000ஆம் ஆண்டில் இருந்து இடம்பெற்று வரும் வீரர்களின் போர் என வர்ணிக்கப்படுகின்ற இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி நேற்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி அளிக்கும் வகையில் அமைந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய அணித் தலைவர் டிலோசன், அணி மூன்று ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக இணைந்த ரமேஸ்குமார் பிரசாத்துடன் இணைந்து பொறுப்பாக ஆடினார். இந்த ஜோடி ஸ்கந்தவரோயதக் கல்லூரி அணிப் பந்து வீச்சை சிறப்பான முறையில் எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தது. இருப்பினும் 33 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இந்த இணை பிரிக்கப்பட்டது. தொடர்ந்து மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மயூரன் பிரசாத்துக்கு சிறந்த ஒத்துழைப்பு வழங்கினார். இந்த ஜோடியைப் பிரிக்க ஸ்கந்தவரோதயக் கல்லூரி கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டது. இருப்பினும் இந்த ஜோடியும் 35 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது. தொடர்ந்து ஒரு சீரான இடைவெளியில் மகாஜனாக் கல்லூரி அணியின் விக்கெட்டுக்கள் சாய்க்கப்பட்டுக்கொண்டிருந்தன. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறப்பான முறையில் ஆடிய பிரசாத் 96 பந்துகளை எதிர்கொண்டு 44 ஓட்டங்களையும், மயூரன் 10, ரமேஸ்குமார் 14, கஜந்தன் 16 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜெனக்ஷன் 27 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, சிந்துஜன், கானுஜன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ஜெனந்தன், கஜந்தன் ஆகியோரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. ஒரு முனையில் றோபேட் றிசாத் சிறப்பாக ஆடியபோதும் மறுமுனையில் எந்தவொரு வீரராலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றோபேட் றிசாத் 65 பந்துகளை எதிர்கொண்டு 22, சுகிர்தன் 10, ரவிகாந்தன் 09 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் ஜனந்தன் 19 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு, கஜந்தன் 21 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

63 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை, ஒரு விக்கெட்டை இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பிரசாத் மூன்று, ரமேஸ்குமார் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழக்காதுள்ளனர். ஒன்பது விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 77 ஓட்டங்களால் மகாஜனாக் கல்லூரி அணி முன்னிலை பெற்றுள்ளது. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

இதேவேளை, காலை அறிமுக நிகழ்வு இடம்பெற்றது. பான்ட் வாத்திய அணி வகுப்புடன் வீரர்கள் வரவேற்கப்பட்டனர். இப்போட்டி நிகழ்வில் கல்லூரிச் சமூகத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (93, 42)



ஆரம்ப நிகழ்வின்போது...











'தினமுரசு' ஊடக அனுசரணையுடன் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தினால் நடத்தப்படும் மாபெரும் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி நேற்று யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இதில் பாடசாலை மற்றும் விளையாட்டுக்கழகங்களின் 14, 16, 18, 20, 23 வயதுக்குட்பட்ட வீர, வீராங்கனைகள் போட்டியில் பங்குபற்றுகின்றனர். இதில் வெற்றியீட்டிய வீர,வீராங்கனைகளுக்கான சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டது. இப்போட்டியில் ஏராளமான வீர,வீராங்கனைகள் பங்குகொண்டமை மகிழ்ச்சி அளித்ததாக யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் ரமணன் தெரிவித்தார்.

# நோயல் விமலேந்திரன் ருவென்ரி-20 யாழ்.மத்திய கல்லூரி வசம் கிண்ணம்


நோயல் விமலேந்திரன் ருவென்ரி-20 வெற்றிக் கிண்ணத்தை யாழ். மத்திய கல்லூரி அணி கைப்பற்றிக் கொண்டது.

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கிடையிலான நோயல் விமலேந்திரன் ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியினால் கடந்த 3ஆம் திகதி முதல் நேற்று வரை நடாத்தப்பட்டது. ஆறாவது ஆண்டாக இடம்பெற்ற இப்போட்டித் தொடரில் 16 பாடசாலை அணிகள் பங்குகொண்டன.


இதன் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி நேற்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நேற்று மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி யூலியஸ் கனிஷ்னின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூலியஸ் கனிஷ்டன் 35 பந்துகளில் 56, நிரோஜன் 33, டர்வின் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யதுஷன், கானாமிர்தன் தலா மூன்று, துவாரகசீலன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 156 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி, ஹரிகரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி 16.4ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இதில் கஜன் 31, கானாமிர்தன் 29, பிருந்தாபன் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹரிகரன் மூன்று, அனல்ராஜ் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்டநாயகனாக யாழ். மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த யூலியஸ் கனிஷ்டன், தொடர் நாயகான அதே அணியைச் சேர்ந்த நிருபன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை, இப்போட்டித் தொடரில் மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)



யூலியஸ் கனிஷ்டன்



நிருபன்

# ஈரான் அணுஆயுத நடவடிக்கை கஜகஸ்தானில் பேச்சு ஆரம்பம்



(அல்மாட்டி)

ஈரானின் அணு ஆயுத நடவடிக்கை தொடர்பாக கஸகஸ்தான் நாட்டில் நேற்றையதினம் முக்கிய பேச்சுவார்த்தை ஆரம்பமாகியுள்ளது.

ஈரான் அணு ஆயுத தயாரிப்புகளில் ஈடுபடுவதாகக் கூறி, அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மருத்துவ ஆராய்ச்சிகளுக்கும் ஆற்றல் உற்பத்திக்குமே அணு ஆராய்ச்சிகளை பயன்படுத்தி வருவதாக ஈரான கூறிவருகிறது.

இந்நிலையில், உலகின் சக்தி வாய்ந்த நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா,இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுடன் ஈரான் பேச்சுவார்த்தைகளை நேற்றுத் தொடங்கியது. கஜகஸ்தான் நாட்டில் உள்ள அலமாட்டி நகரில் இந்தக் கூட்டம் இன்று வரை நடைபெற உள்ளது.

இந்த வருடத்தில் இரண்டாவது முறையாக நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தையில், ஈரான் அணு செயற்பாடு களை கட்டுப்படுத்த ஒப்புக்கொண டால் அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை குறைக்கலாம் என்ற முடிவை உலகின் சக்தி மிகுந்த நாடுகள் முன் வைக்க உள்ளன. இந்த முடிவுகளை ஈரான் ஏற்றுக் கொள்வது சந்தேகமே என்று தூதரக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

# கர்ப்பிணிப்பெண்களுக்கு பாதங்கள் வளரும் ஆச்சரியம்



கருவுற்ற காலத்தில் பெண்களுக்கு உடல் எடை அதிகரிப்பு, சோர்வு நிலை உள்ளிட்ட பல மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு.

அமெரிக்காவில் உள்ள லோவா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், கர்ப்பிணிகளின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர். இந்த ஆய்வில் 49 கர்ப்பிணிப் பெண்கள் பங்கேற்றனர்.

இவர்களில், 29 பேர் முதல் முறை கருத்தரித்தவர்கள். 17 பேர் இரண்டாவது முறையும், மூன்று பேர், மூன்றாவது முறையும் கர்ப்பம் தரித்தவர்கள்.

இவர்களின் கர்ப்ப காலத்திலும், பிரசவத்துக்கு பின்னர் ஐந்து மாதங்களிலும் உடலில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து கண்காணிக்கப்பட்டன.

இந்தப் பெண்களில், 60 முதல் 70 சதவீதத்தினரின் குதிக்கால் அளவு குறைந்ததையும், பாதங்களின் நீளம் அதிகரித்ததையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இவர்கள், தாங்கள் முன்பு அணிந்ததை விட நீளமான காலணிகளை வாங்கியது ஆய்வில் தெரியவந்துள்ளது.

கர்ப்ப காலத்தில், அதிகரிக்கும் உடல் எடை கொடுக்கும் அழுத்தம் காரணமாக, இந்த மாற்றம் ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஒபாமா–புடின் ஜூனில் சந்திப்பு



(மொஸ்கோ)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் வரும் ஜூன் மாதம் சந்தித்துப் பேச உள்ளதாக ரஷ்ய ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

ஜி-8 நாடுகளின் உச்சி மாநாடு வரும் ஜூன் மாதம் அயர்லாந்து நாட்டில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் அமெரிக்கா ரஷ்யா, கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் விளாடிமிர் புடின் சந்தித்துப் பேச வாய்ப்புள்ளதாக புடினின் அரசியல் ஆலோசகர் யூரி உஷா கோவ் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வரும் செப்ரெம்பர் மாதம் ரஷ்யாவில் நடைபெற உள்ள ஜி-20 உச்சி மாநாட்டின் போதும் ஒபாமாவுடன் புடின் பேசுவார் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஏவுகணை பாதுகாப்பு, சிரிய உள்நாட்டுப் போர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக இருநாட்டுத் தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர்.

விரைவில் மொஸ்கோ வரவுள்ள அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் டொம் டானிலன் புடின் - ஒபாமா சந்திப்பை உறுதிப்படுத்துவார் எனத் தெரிகிறது.

# சூரியனைவிடப் பெரியகிரகம் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிப்பு

ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்த ஒரு புதிய கிரகத்தை, ஜெனிவா பல்கலைக்கழகத்தினர் தொடர்ந்து ஆராய்ந்து ஒரு புதிய தகவலை வெளியிட்டுள்ளனர்.

அதில் இந்தக் கிரகம் சூரியனை விடப் பன்மடங்கு பெரியதாகவும், ஒளி பொருந்தியதாகவும் காணப்படுகிறது என்று தெரிவித்தனர்.


இதுகுறித்து ஐரோப்பாவின் விண்வெளி ஆராய்ச்சி கழகமான இன்டிகிரில் கூறுகையில், பூமியில் இடம்பெற்றுள்ள நட்சத்திரக் கூட்டம் பற்றி மேலும் அறிய காமா கதிர் வீச்சுக்களை ஆராய வேண்டும். கடந்த 2002ஆம் ஆண்டில் விஞ்ஞானிகள் முடிவெடுத்து அதன்படி செயற்பட்டு வந்தனர்.

தற்பொழுது என்.ஜி.சி. 4845 என்று பெயரிட்டுள்ள நட்சத்திரக் கூட்டத்தில் சூரியனை விட மூன்று லட்சம் மடங்கு அடர்த்தி உடைய ஒரு கிரகம், கருப்புத் துளையினுள் ஒளிர்ந்து கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

இந்த ஒளிக்கிரகம் கடந்த முப்பதாண்டுகளாக செயலற்றுக் கிடந்தது.

தற்போது விழித்தெழுந்துள்ள கறுப்புத் துளை வியாழன் கிரகத்தைப் போல 15 மடங்கு பெரிய ஒரு பொருளை அத்துளையின் உள்ளே ஈர்த்துக் கொண்டுள்ளது. இந்த ஒளிக் கிரகம் 47 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் காணப்படுகிறது.

மேலும், ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சிக்கழகம் இந்த ஒளி வெள்ளத்தை இராட்சதக் கிரகம் என்றும் குறிப்பிட்டுள்ளது.



# தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார் பிலாவல்



பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் புட்டோ, நேற்று முன்தினம் முதல் தேர்தல் பிரசாரத்தை தொடங்கியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனசிர் புட்டோ, கடந்த தேர்தல் பிரசாரத்தின்பொழுது தற்கொலைத் தாக்குதலின் மூலம் கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் மக்கள் கட்சி, கடந்த 2008இல் நடந்த தேர்தலில் அமோக வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தது. பெனாசிர் மகன் பிலாவல் புட்டோ, கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார். பெனாசிரின் கணவர் ஆசிப் அலி சர்தாரி ஜனாதிபதியாக உள்ளார்.

இந்நிலையில், வருகின்ற மே 11ஆம் திகதி பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டு உள்ளதால் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் பிலாவல் புட்டோ, பிரிட்டனிலிருந்து கடந்த மாதம் தாயகம் திரும்பினார்.

தேர்தலில் தன் ஆதரவாளர்களுக்கு சீட் ஒதுக்காததால் தந்தைக்கும், மகனுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால், பிலாவல் பிரசாரங்களில் ஈடுபடாமல் டுபாய் புறப்பட்டுச் சென்றார்.


தேர்தல் நெருங்கும் சமயத்தில் மக்களின் செல்வாக்கு பெற்ற பிலாவல் இல்லாமல் பிரசாரம் சூடுபிடிக்காது என்பதால் மகனை சமாதானப்படுத்த ஜனாதிபதி சர்தாரி டுபாய் புறப்பட்டு சென்றார். சமாதானம் அடைந்த பிலாவல், இரண்டு நாட்களுக்கு முன்னர் இஸ்லாமாபாத் திரும்பினார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பெனாசிர் புட்டோவின் தந்தையுமான ஜூல்பிகர் அலி புட்டோவின் நினைவு தினம் சிந்து மாகாணத்தில், நவ்தெரோ பகுதியில் நேற்று முன்தினம்அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிலாவல் தனது தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார்.

# உகண்டா கிளர்ச்சிக்குழுத்தலைவரை பிடித்துக்கொடுத்தால் 5 மில்லியன்

## – அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் "போர்க்குற்ற பரிசுத்தொகைத் திட்டத்தில் புதிதாக உக ண்டா நாட்டைச் சேர்ந்த கிளர்ச்சிக் குழுவின் தலைவர் ஜோசப் கெனியின் பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. அவரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 5மில்லியன் டொலர்பரிசுத்தொகை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தக்குழுவைச் சேர்ந்த 3 பேரின் பெயர்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

ஜோசப் கெனி உகண்டாவில் கடவுளின் எதிர்ப்புப் படை லோர்ட்ஸ் ரெசிஸ்டன்ஸ் ஆமி) என்ற கிளர்ச்சிக் குழுவை அமைத்து அரசுக்கு எதிராக பல தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. மேலும், கெனியின் தீவிரவாத நடவடிக்கைகள் 4 நாடுகளில் பரவி இருந்ததாகவும் கூறப்படுகிறது. இவர் மீது குழந்தை கடத்தல் உள்ளிட்ட பல குற்றங்கள் சாட்டப்பட்டு, உலக அளவில் தேடப்பட்டு வந்தார்.

இவர் ஆபிரிக்க கண்டத்தில் உள்ள மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டின் காடுகளில் மறைந்திருப்பதாக கூறி அமெரிக்கா மற்றும் உகண்டா அரசு களதேடுதல் வேட்டையை நடத்தி வந்தன.

ஆனால், தற்போது மத்திய ஆபிரிக்க குடியரசு நாட்டில் நடந்து வந்த உள்நாட்டுப் போர்களில் கிளர்ச்சியாளர்கள் அந்நாட்டு தலைநகரை கைப்பற்றினர். இதனால் அமெரிக்கா தேடுதல் வேட்டையை நிறுத்தி விட்டு, இந்தப் பரிசு அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

# ஐயாயிரம் பாடசாலை அபிவிருத்தி கிளிநொச்சியிலும் நேற்று ஆரம்பம்



(திருநெல்வேலி)

மகிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கத்துக்கமைய 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளைப் புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் கிளிநொச்சி கிருஷ்ணபுரம் இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் கட்டட நிர்மாணத்துக்கான அடிக்கல்லை நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில், கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், மாவட்டத் திட்டப் பணிப்பாளர் எஸ்.மோகனபவன், கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

கரைச்சிப் பிரதேசத்தில் உள்ள 15 பாடசாலைகளில் 8 பாடசாலைகள் இத் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டிருந்தன. (137)

# திவிநெகும மாதிரிச் சந்தை

(திருநெல்வேலி)

திவிநெகும பொதுச்சந்தை எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய இரு நாட்களும் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் சந்தையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் இதனை ஆரம்பித்து வைக்கவுள்ளார். காலை 7.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை இடம்பெறவுள்ள இச்சந்தை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, சமுர்த்தி அதிகாரசபை, கரைச்சி பிரதேச செயலகம் ஆகியவற்றின் இணைந்த செயற்பாட்டின் மூலம் நடைபெறவுள்ளது.

விவசாயிகளினால் உற்பத்திசெய்யப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் பொதுமக்களுக்கு இச்சந்தையில் மலிவு விலையில் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (137)

# வீதி விபத்தில் இருவர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று இரவு 8.00 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் பைலஸ் கோபுரம் அமைந்துள்ள பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரே விபத்துக்குள்ளாகிய நிலையில் இவர்கள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## யாழ்.குடாவில்...

அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பிடியானை பிறப்பிக்கப்பட்ட 12 பேரும், சந்தேகத்தின் பேரில் 15 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய நான்கு பேரும், ஏனைய குற்றங்களுக்காக 38 பேரும் அதேபோன்று யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவில் சட்டவிரோத மதுபாவனை, அடித்துக் காயப்படுத்தியமை, சந்தேகத்தின் பேரில் மற்றும் குடிபோதையில் வாகனம் செலுத்தியது உட்பட 60 பேர் உள்ளடங்கலாக இந்த 128 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த வாரம் இரண்டு காசோலை மோசடிச் சம்பவங்களும், கடை, வீடு என்பன உடைத்துத் திருடப்பட்ட சம்பவங்கள் ஐந்தும், பண மோசடிச் சம்பவங்கள் இரண்டும் ஒரு பாலியல் வல்லுறவுச் சம்பவமும் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏற்கனவே யாழ். மாவட்டத்தில் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டியில் பயணிப்பவர்கள் மீதும், வெளிச்சமின்றி துவிச்சக்கர வண்டியில் பயணிப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், ஒரு மாதகால அவகாசமும் வழங்கப்பட்டிருந்த நிலையில் பொதுமக்கள் இவ்வாறான நடவடிக்கைகளைக் கடைப்பிடிக்காமை பொலிஸாரினால் அவதானிக்கப்பட்டிருப்பதாகவும தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இது குறித்து நடவடிக்கைகளை இறுக்கமாக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்ததுடன், ஊடகங்களை இவ்விடயத்தில் பொது மக்களுக்கு விழிப்புணர்வூட்டுமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், பிரதான நகர்ப்பகுதிகளிலும் ஏனைய பகுதிகளிலும் சங்கிலி அறுப்பு, பிற்பொக்கட் களவு போன்றவற்றைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அவர், யாழ்.நகரில் இடம்பெறும் பாலியல் சம்பவ நடவடிக்கைகள் குறித்து தமக்குத் தகவல் கிடைக்குமிடத்து அதனைப் பரிசீலித்து நீதவானின் அனுமதியுடனேயே நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவித்ததுடன், குற்றச்செயல்கள் குறித்து பொதுமக்கள் தமக்குத் தகவல்தர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். (பா)

## இலங்கைக்...

தகவலின்படி இனந்தெரியாத 22 நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்திய மற்றும் இலங்கைக் கடற் பகுதிகளில் சஞ்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நீர்மூழ்கிக் கப்பல்களை இவ்வாறு பயன்படுத்தக் கூடிய வல்லமை சீனாவிற்கு மட்டுமே காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அமெரிக்கப் புலனாய்வுத் தரவுகளின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கைக்கு தென் பகுதிக் கடற்பரப்பில் இவ்வாறான 13 நீர்மூழ்கிக் கப்பல்களின் சஞ்சரிப்புக்கள் பதிவாகியுள்ளன. 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தடவையாக நீர்மூழ்கிக் கப்பல் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழில்...

சாலையிலும், நல்லூர் வலயத்தில் சென். பெனடிக்ஸ் பாடசாலையிலும், தீவக வலயத்தில் மண்டைதீவு றோ.க.த.க. வித்தியாலயம், அல்லைப்பிட்டி ஆர்.சி, வேலணை தெற்கு வித்தியாலயம், ஊர்காவற்துறை பிரதேசத்தில் மெலிஞ்சிமுனை வித்தியாலயம் ஆகியவற்றை ஈ.பி.டி.பி. யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) இத்திட்டத்தை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வினைத் தொடர்ந்து அனைத்து மாணவர்களின் பெற்றோருக்கும் பயன் தரும் மரங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## அழுத்தங்கள்...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளித்த போதிலும், தமிழக சட்டமன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையை தொடர்ந்தும் நட்பு நாடாக கருத வேண்டாம் என தமிழக அரசாங்கம் கோரியிருந்ததாகவும், இதனை மத்திய அரசாங்கம் ஏற்கவில்லை எனவும் சல்மான் குர்ஷித் மேலும் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் கப்பலில் வேலை செய்தாரா? குடும்பஸ்தர் மீதான வழக்கு தள்ளுபடி

(திருநெல்வேலி)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நான்கு வயதுப் பிள்ளையொன்றின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.மேல் நீதிமன்றத்தினால் நேற்று விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்பட்டார்.

முதலைக்குழி, கரணவாய் தெற்கு, கரணவாயைச் சேர்ந்த புஷ்பானந்தராஜா புஷ்பரூபன் (வயது-35) என்பவர் புலிகள் இயக்கத்தில் அங்கத்தவராக இருந்து கொண்டு கப்பல் புதுப்பித்தல் வேலையில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சாட்டி ஓமந்தையில் வைத்து இராணு வத்தினரால் கடந்த 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 15 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். 2012ஆம் ஆண்டு ஜுலை மாதம் இவர் மீது யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவருக்கெதிரான சான்றாகப் பொலிஸ் அதிகாரிக்கு இவரால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் இருந்தது. இவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இக்குற்ற ஒப்புதல் வாக்குமூலம் எதிரியினால் சுயமாக வழங்கப்படவில்லை எனவும், பலாத்கா ரம் பிரயோகிக்கப்பட்டே பெறப்பட்டது என்றும் நீதிமன்றில் சமர்ப்பணம் செய்தார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி இக்குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்து அதனை நிராகரித்துக் கடந்த தை மாதம் 16 ஆம் திகதி தீர்ப்பு வழங்கியிருந்தார்.

எதிரிக்கெதிரான வேறு சான்றுகள் உள்ளனவா என்பதை ஆராய்வதற்காக வழக்கு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. நேற்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது எதிரிக்கெதிராக வேறு சான்றுகள் எதுவும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து யாழ்.மேல்நிதிமன்ற நீதிபதி ஜெ.விஸ்வநாதன் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

ஆனால், எதிரிக்கு எதிராக வேறு வழக்குகள் மன்னார் மற்றும் வவுனியா நீதிமன்றங்களில் விசாரணைக்கு எடுக்கப் படவுள்ளதினால் எதிரி அங்கு அழைத்துச் செல்லப்பட்டார்.


எதிரி தரப்பில் சட்டத்தரணி மு.றெமீடியஸ் மற்றும் அரச தரப்பில் அரச சட்டவாதி நளினி கந்தசாமியும் ஆஜராகியிருந்தனர். (137)

## புத்தாண்டு...

பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் மேலும் தகவல் தருகையில், காலை 7.00 மணிக்கு சைக்கிள் ஓட்டப் போட்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டி என்பன ஆரம்பமாக உள்ளதுடன், தொடர்ந்து சுவட்டு மைதானப் போட்டிகளும், கயிறு இழுத்தல், கிடுகு பின்னுதல் உட்படப் பல்வேறு விதமான விளையாட்டுப் போட்டிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், ஏற்கனவே இந்த விளையாட்டுப் போட்டிகள் குறித்து ஒலிபெருக்கி வாயிலாக பொதுமக்களுக்கு விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# கடுவெலவில் பருவகால சந்தை



(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்சவின் அழைப்பின் பேரில் சித்திரைப் புத்தாண்டையொட்டிய பருவகால விற்பனைச் சந்தையை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

கொழும்பு கடுவெல பகுதியில் அமையப்பெற்றுள்ள மேற்படி பருவகால விற்பனைச் சந்தை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் பொது வச திகள் பொறியியல்துறை அமைச்சர் விமல் வீரவன்சவினது தலைமையிலான பஞ்சாயுத அமைப்பும் கடுவெல விவசாய அமைப்பும் இணைந்து இவ் விற்பனைச் சந்தையை ஏற்பாடு செய்திருந்தன. கைத்தொழிற் துறையை மென்மேலும் விருத்தி செய்து அதனூடாகத் துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அமையப்பெற்ற இப் பருவகால சந்தைக்கு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும் முழுமையான பங்களிப்பை வழங்கியுள்ளது.

## கிளிநொச்சியில்...

(வயது-66), அவரது மனைவியான சிறிரதி (வயது-58) ஆகியோரே மரணமடைந்துள்ளனர். இதன் போது ஆட்டோச் சாரதி படுகாயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நிகழ்காலத்துக்கு சாத்தியமான பொறிமுறையே எமது பிரதேசத்துக்கு வளம் சேர்க்கும்



நிகழ்காலத்திற்குச் சாத்திய மான பொறிமுறையை அனைவரும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவதன் மூலமே எமது பிரதேசங்களை வளமுடையதாக மாற்றமுடியும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைதினம் "எதிர்கால நோக்குகளுக்கு ஏற்ப அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக" எனும் கருப்பொருளில் 5000 ஆரம்பப் பாடசாலைகளையும், 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைக்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் தொடக்க நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி அவர்களின் வாழ்வை நல்லதோர் நிலைக்கு இட்டுச் செல்லும் வகையில் நிகழ்காலத்திற்கு சாத்தியமான வழியில் முயற்சிப்பதனூடாகவே அபிவிருத்தியினை மேம்படுத்த முடியும். அத்தகைய சாத்தியமான பொறிமுறையை அனைவரும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்த தயாராக வேண்டும்.


மகிந்த சிந்தனையூடாக 5000 ஆரம்பப் பாடசாலைகளையும், 1000 இடைநிலைப் பாடசாலைகளையும் புனரமைக்கும் செயற்றிட்டங்களை சுயலாப அரசியல் ஊடகங்கள் தவறான செய்திகளாக்கி விமர்சிக்கவும் முயற்சிக்கலாம். ஆனால் சுபீட்சமான எதிர காலத்திற்காக நடைமுறைக்குச் சாத்தியமான வழியில் செயற்பட வேண்டும்.சுயலாப நோக்குடைய எதிர்ப்பு அரசியலூடாகவோ, மக்களின் உணர்வுகளை தட்டியெழுப்பும் உசுப்பேத்தும் அரசியலூடாகவோ எதனையும் சாதித்துவிட முடியாது. கடந்த காலங்கள் எமக்கு கற்றுத்தந்த பாடங்கள் இதற்கு சான்றாகவுள்ளது.

உங்களது தேசம் - உங்களது பாடசாலை என்ற உயர்வான சிந்தனையுடன் செயற்படுங்கள். நல்லதையே சிந்தியுங்கள் எதிர்காலம் நலமாகும். என அவர் மேலும் தெரிவித்தார்.

தலா 5இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் உடுவில் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மல்லாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை, அளவெட்டி தெற்கு அ.மி.த.க.பாடசாலை, மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம், கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஸ்ட வித்தியாலயம், தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளி, மாவிட்டபுரம் வடக்கு அ.மி.த.க.பாடசாலை, வலித்தூண்டல் றோ.க.த.க. பாடசாலை காரைநகர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுப்பிரமணிய வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் தொடக்க நிகழ்வுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட மாவட்ட அமைப்பாளர் கமல் அவர்களின் பங்குபற்றுதலோடு நடைபெற்றது.

குறித்த பாடசாலைகளின் அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில், உடுவில் பிரதேச செயலர் நந்தகோபாலன், தெல்லிப்பழை பிரதேச செயலர் சிறிமோகனன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு, ஈ.பி.டி.பியின் வலிவடக்கு பிரதேச இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு), ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச இணைப்பாளர் கண்ணன் (றஜனி), ஈ.பி.டி.பி.யின் பிரதேச ஒருங்கிணைப்பாளர்கள் வள்ளுவன், வலன்ரைன், மற்றும் பிரதேச சபைகளின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# 22 ஓட்ட வித்தியாசத்தில் சன் ரைசர்ஸ் வெற்றி



ஐ.பி.எல். தொடரில் நேற்று ஐதராபாத் ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் உள்ளூர் அணியான ஐதராபாத் சன்ரைசர்ஸ் அணி, புனேவாரியர்ஸ் அணியுடன் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற புனே அணி, பந்துவீச முடிவுசெய்தது.

தொடக்க வீரர்களாக அக்சத் ரெட்டி, பார்த்தீவ் படேல் ஆகியோர் களமிறங்கினர். 19 ஓட்டங்கள் எடுத்த பார்த்தீவ் படேல், திண்டாவின் பந்தில் விக்கெட்டை இழந்தார். கப்டன் சங்ககாராவும் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நிலைமையை சமாளித்து ஆடிக் கொண்டிருந்த அக்சய் ரெட்டி 27 ஓட்டங்கள் எடுத்தபோது, அவரை யுவராஜ் சிங் வெளியேற்றினார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒயிட்டும் 10 ஓட்டங்களுடன் திரும்பினார். இதனால் 15 ஓவர்களில் அந்த அணி 4 விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்ங்கள் மட்டுமே எடுத்திருந்தது. அதுவரை 9 பவுண்டரிகள் மட்டுமே அடித்திருந்தனர்.

கடைசி 5 ஓவர்களில் ஓட்டங்களை உயர்த்த வேண்டிய கட்டாயத்தில் அதிரடியாக ஆடிய பெரேரா முதல் 6 ஓட்டங்களைப் பதிவு செய்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினார்.

ஆனால் அவர் 30 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார். விகாரி 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதனால் சன் ரைசர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 126 ஓட்டங்கள் எடுத்தது.

## வழமைக்குத் திரும்பியது மன்னார் பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டத்தில் தனியார் பேருந்து சேவைகள் யாவும் இன்று முதல் வழமைக்குத் திரும்புகின்றன. யாழில் இரு ந்து மன்னார் செல்லும் பஸ் சேவையும் வழமையான நேர அட்டவணைப்படி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# பிரபல பாடசாலை ஒன்றில் மாணவர்கள் குழுச்சண்டை

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். சாள்ஸ் பாடசாலையில் உயர்தர மாணவர்களுக்கும், சாதாரணதர மாணவர்களுக்கும் இடையில் குழுச் சண்டைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த மூன்று தினங்களாக இந்த இருவகுப்பு மாணவர்களும் குழுச்சண்டைகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இவ்விடயம் குறித்து பாடசாலை நிர்வாகம் கவனம் செலுத்தவில்லை என பெற்றோர் கவலை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பெற்றோர் கோருகின்றனர்.

# நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு புதிய கட்டடம் திறப்பு

(வவுனியா)

வவுனியா பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு புதிய கட்டடத்தொகுதி நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது. யாழ் வீதியியல் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தொகுதியினை நீர்ப்பாசன அமைச்சர் தினேஸ் குணவர்த்தன சம்பிரதாயபூர்வமாக திறந்து வைததிருந்தார்.

65 மில்லியன் ரூபா பெறுமதியில் அமைக்கப்பட்ட இக் கட்டடமானது வவுனியா பிராந்தியத்தின் நீர்ப்பாசன வேலைத்திட்டங்களை மேம்படுத்துவதற்கும் அதனூடான சேவைகளுக்கும் பெரும் பங்காற்றுமென இதன்போது அமைச்சர் கருத்து தெரிவித்திருந்தார்.

இந் நிகழ்வில் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் நிருபமா ராஜபக்ஷ, அமைச்சின் செயலாளர் குணசேகர, நீர்ப்பாசன சபையின் தலைவர் கருணாசேன கெட்டியாராச்சி, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர உட்பட பலர் கலந்துகொண்டிருந்தனர். (160)

# டி.எவ்.சி.சி. வங்கிக்கிளை நெல்லியடியில் ஆரம்பம்

(பருத்தித்துறை)

நெல்லியடி நகரில் டி.எவ்.சி.சி. வங்கியின் கிளை அலுவலகம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் நான்காவது கிளையாகத் திறந்துவைக்கப்பட்டிருக்கும் இவ் வங்கி அலுவலகத்தை அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் லக்ஸ்மன் சில்வா நாடாவெட்டித் திறந்து வைத்தார். காலை 9.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழவுக்கு இவ்வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் தலைமை தாங்கினார். (01)

# "ரெலோ" தேசிய மாநாடு வவுனியாவில் இன்று

தமிழீழ விடுதலை இயக்கத்தின் 8 ஆவது தேசிய மகாநாடு இன்றும் நாளையும், வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதன் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார். இதன்படி காலை 10.00 மணிக்கு கட்சியின் 7 ஆவது தேசிய மாநாட்டின் பதவியியல் தலைமைக்குழு ஒன்று கூடுகிறது. தொடர்ந்து நாளை மாவட்ட ரீதியில் 8 ஆவது தேசிய மாநாட்டிற்கான பதவித் தெரிவுகள் இடம்பெறும் என்று அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்போது மாவட்ட ரீதியில் 72 பொதுக்குழு உறுப்பினர்களும் சர்வதேச ரீதியாக 20 பேரும் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவ்வாறு தெரிவாகின்ற 92 பேரும் ஒன்றுகூடி, மேலும் 23 தேசிய பட்டியல் உறுப்பினர்களை தெரிவு செய்வதன் அடிப்படையில் மொத்தமாக 115 பொதுக்குழு உறுப்பினர்கள் தெரிவாவர். தொடர்ந்து அவர்கள் தலைவர், செயலாளர் தேசிய அமைப்பாளர், பொருளாளர் உள்ளிட்ட பதவிகளுக்கானவர்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

# சம்பள நிர்ணயம்; புதிய ஒப்பந்தம் கைச்சாத்து

## தோட்டத் தொழிலாளர்களுக்கு விமோசனம்

(யாழ்ப்பாணம்)

சம்பள ஒப்பந்தம் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவை ஈடு செய்யாது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் கூட்டொப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு நடைமுறையாகும் விதத்தில் எட்டப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் மூலம் தொழிலாளர்களின் நாட்சம்பளம் 515 ரூபாயிலிருந்து 620 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளதாக இலங்கை முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

தொழிலாளர்கள் உற்பத்தித்திறனையும் தொழிற்திறனையும் அதிகரிப்பதில் ஒத்துழைப்புடன் நடந்துகொள்வார்கள் என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் மேற்கொளப்பட்டுள்ளதாக முதலாளிமார் சம்மேளனம் கூறியுள்ளது.

அதன்படி, 25 வேலைநாட்கள் கொண்ட ஒரு மாதத்தில் தொழிலாளி ஒருவரின் வருகை 75 வீதத்தை தாண்டினால் அவருக்கு 15,500 ரூபாய் சம்பளமாகக் கிடைக்கும் என்று இருதரப்பும் இணங்கியுள்ளது.

நாளொன்றுக்கு தேவையான தேயிலை நிறையை விட மேலதிகமாகப் பறிக்கப்படும் தேயிலைக்கு வழங்கப்படும் கொடுப்பனவு 3 ரூபாயால் உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த கூட்டொப்பந்தம் ரகசியமான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை கணக்கில் எடுக்கவில்லை என்றும் பேச்சுவார்த்தையில் பங்கெடுக்காத தொழிற்சங்கங்கள் விமர்சித்துள்ளன.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஏப்ரல் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.